## 2. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 185 (2) மற்றும் 190-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதி 185 (2) மற்றும் விதி 190-ஐ தளர்த்தக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதிகள் 185 (2) மற்றும் 190-ஐ தளர்த்தி இன்று 12-11-2008 அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) இலங்கையில் தமிழர் பகுதிகளில் போர் நிறுத்தம் மேற்கொள்ள மத்திய அரசுமூலம் இலங்கை அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் தீர்மானத்தை முன்மொழியலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் தீர்மானத்தை இந்த அவையின் ஒப்புதலுக்காக முன்மொழிகிறேன்:

"ஏறத்தாழ நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முடிவுக்கு வாராமல், அந்த மண்ணின் மைந்தர்களாம் தமிழின மக்களின் உயிர், உடைமைகள் எதற்கும் உத்தரவாதமில்லாமல், அவர்களின் குடும்பங்கள், குழந்தை குட்டிகள் என இலட்சக்கணக்கானோர் அகதிகளாக அயல்நாடுகளுக்கு ஓடியவர்கள் போக எஞ்சியிருப்போர்,

2008 நவம்பர் 12] [கலைஞர் மு. கருணாநிதி]

எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்பார்த்துத் துடித்துத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

இந்நிலை குறித்து முடிவெடுக்க, அக்டோபர் 14 ஆம் தேதி நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்திற்கிணங்க, கடலில் எல்லை வகுக்கப்பட்டு, ஓர் உடன்பாட்டின்மூலம் தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உரிமைக்கும் பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டாலும் நமது பக்கத்து நாட்டிலேயே நமது உடன்பிறந்த தமிழ் மக்கள், நித்த நித்தம் சிந்தும் இரத்தமும், வடிக்கும் கண்ணீரும் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகளாகிவிட்ட கொடுமைக்கிடையே இந்தியப் பேரரசின் உதவியுடன் இலங்கைத் தமிழர்களுக்கான உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் தமிழகத்திலிருந்து, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் வாயிலாக அனுப்பி வைக்கிறோம். எனினும், அவர்களுக்கு இந்த உதவிகள் மட்டும் போதுமானதல்ல.

அவர்களின் உயிர், உடைமை ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு, இலங்கையில் அமைய வேண்டிய அமைதி நிறைந்த சம நிலை வாழ்வு, இவை அங்குள்ள தமிழர்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கான அழுத்தமான நடவடிக்கையை நமது இந்திய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் இந்த அவல நிலை உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக வரலாற்று ரீதியாகவும், கலாச்சாரம் மற்றும் பண்பாடு ரீதியாகவும் ஒன்றாக உள்ள ஏழு கோடி இந்தியத் தமிழர்களின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதன் விளைவாகத் தமிழகத்தில் அனைத்து அரசியல் இயக்கங்களும், அரசியல் சார்பற்ற அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி, இலங்கை அரசுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. மாணவர்கள், வணிகர்கள், திரைப்படக் கலைஞர்கள், திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்கள், சின்னத் திரைக் கலைஞர்கள், தொழிலாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என எல்லாத் தரப்பினரும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள். அரசு சார்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கப்பட

வேண்டும் என்றும் வலியுறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து, சென்னையில் வரலாறு படைத்த மனிதச் சங்கிலி அணி வகுப்பு நடத்தி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய மாபெரும் நிகழ்ச்சி மறக்கவொண்ணாதது.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் நீங்க வேண்டுமானால் அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது உலகத் தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும். போர் நிறுத்தம் என்பது இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று எனத் தமிழக முதலமைச்சர் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து, போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கு நாங்கள் தயார் என்று மற்றொரு தரப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இலங்கை அரசும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டு, உடனடியாகப் படைகளைப் பழைய நிலைக்கு விலக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்துகிறது. இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவோர், தே.மு.தி.க. உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள் வரவில்லை. அடுத்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள். நேற்றே இதுகுறித்து நிறைய பேசிவிட்டார்கள். அதிக நேரம் எடுக்கக்கூடாது. சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்காக தமிழினத் தலைவர், உலகத் தமிழர்களின் நம்பிக்கையாய் விளங்குகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கையிலே தமிழர்கள்மீது

2008 நவம்பர் 12] [திரு. து. ரவிக்குமார்]

நடத்தப்படுகின்ற தாக்குதல் எந்த அளவுக்கு மனிதக் கற்பனைகளுக்கெல்லாம் அப்பால், அவற்றையெல்லாம் தாண்டி, கொடூரமான நிலையிலே இருக்கின்றது என்பதை உலகமெங்கும் வாழ்கின்ற மக்கள் இன்றைக்கு எடுத்துச்சொல்லி வருகிறார்கள். இது தொடர்பாக, இங்கிலாந்து பாராளுமன்றத்திலேகூட விவாதம் நடைபெற்று, அங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களும் தங்களுடைய அனுதாபத்தைத் தெரிவிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அங்கே சுமார் ஐந்து இலட்சம் பேர், உள் நாட்டிலேயே அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டு காடுகளிலே மரங்களின்கீழே இன்றைக்கு அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டு 30,000 மாணவர்கள் இப்போது பதுங்குக் குழிகளிலே தங்கள் வாழ்க்கையை நடத்துகின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது. பாம்புக் கடிக்கு மருந்து இல்லாத காரணத்தினாலே நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் அங்கே பாம்புக் கடியால் மாண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சர்வதேசத் தொண்டு நிறுவனங்களால் இரண்டு டிரக்குகளிலே அனுப்பப்பட்ட மருந்துகள்கூட அங்கே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. உணவு வழங்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முன்முயற்சியின் காரணமாக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு, அதன் முடிவுக்கு அப்புறம்தான், கண்மூடித்தனமான வான் வழித் தாக்குதல் அங்கே ஓரளவுக்கு குறைக்கப்பட்டது என்றாலும்கூட மீண்டும் அந்த அரசு, அந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே, இன்றைக்கு இலங்கை அதிபர் அவர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றார்கள். இந்தச் சூழலில் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானம் நிச்சயமாக அங்கே ஒரு சுமூக நிலை ஏற்படுவதற்கு வழிகோலும் என்று நாங்கள் கருதுகிறோம்.

நம்முடைய கோரிக்கை ஒன்றேயொன்றுதான். இலங்கையிலே அப்பாவித் தமிழ் மக்கள்மீது தொடுக்கப்பட்டு இருக்கின்ற அந்த ஈவு இரக்கமற்ற இனப் படுகொலை நிறுத்தப்பட வேண்டும். அதற்கு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும். அதற்கு இந்திய அரசு தலையிட்டு, இலங்கையை வலியுறுத்தி உடனடியாக போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வழிவகை காண வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மறைந்த தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள் முன்முயற்சியிலே மேற்கொள்ளப்பட்ட ஜெயவர்த்தனே - ராஜிவ் காந்தி

ஒப்பந்தத்திலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வடக்கு, கிழக்குப் பகுதிகளை மீண்டும் ஒன்றாக இணைத்துத் தமிழர்களின் தாயகமாக அறிவிப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும். இதற்கு இடையிலே தமிழர் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள், ஐ.நா. சபையைச் சார்ந்த அமைப்புகளையெல்லாம் மீண்டும் அங்கே பணியாற்றுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதுமட்டுமின்றி, 2000 டன் உணவுப் பொருட்களை நாம் நம்முடைய முதல்வர் அவர்களுடைய முன்முயற்சியிலே அனுப்புகின்றோம். அது மட்டுமே போதாது என்று இந்தத் தீர்மானத்திலேயே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மருந்துப் பொருட்களையும் உடனடியாக அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உடனடியாக அங்கே நடக்கின்ற மனிதாபிமானமற்ற தமிழர் விரோதப் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள்.

*முற்பகல் 10-50*

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948-ல் இலங்கை நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த நாளில் தொடங்கிய துயரம், 60 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொப்புள்கொடி உறவுகொண்ட தமிழினத்தை இன்று வெறிபிடித்த சிங்கள அரசு பூண்டோடு அழிப்பதற்குத் திட்டமிட்டு தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. வரலாற்று ஆவணங்களின்படி பார்த்தால் இலங்கைத் தீவு தமிழர்களுக்கு மட்டுமே சொந்தம். சிங்களவர்கள் பின்னால் வந்து குடியேறியவர்கள். இதைத்தான் ஆன்றோர்கள், சரித்திர வல்லுநர்கள், வரலாறாக எழுதியிருக்கின்றார்கள். அதற்காக அந்தத் தீவு முழுவதும் நமக்குச் சொந்தம் என்று நான் இப்பொழுது வாதம் செய்வதற்காக வரவில்லை. அங்கே தமிழர்கள் ஒரு பகுதியிலும், சிங்களவர்கள் மற்றொரு பகுதியிலும் தனி அரசு அமைத்து ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்களுடைய ஆதிக்கம். 1895-ல் ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் வந்து யாழ்பாணத்தைக் கைப்பற்றியதற்குப் பிறகு,

2008 நவம்பர் 12] [திரு. மு. கண்ணப்பன்]

1933 ஆம் ஆண்டு சிங்களவர்களோடு சேர்த்து தமிழர் பகுதியும் ஒன்றாக இணைக்கப்பட்டு சிங்கள நாடு. இலங்கை நாடு என்று ஒன்றாக அறிவிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு வெள்ளைக்காரர்களிடமிருந்து விடுதலை பெற்ற நேரத்தில் ஒரே நாடாக அறிவிக்கப்பட்டு அது தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது. அதே ஆண்டில் டிசம்பர் 12 ஆம் தேதி வாக்கில் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்களுடைய, எம்.பி.-க்களுடைய எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக 10 இலட்சம் பேர், இந்திய வம்சாவழித் தமிழர்கள் குடியுரிமை பறிக்கப்பட்டது. உலகத்தில் வேறு எந்த இனத்துக்கும், எந்த நாட்டிலும் இதுபோன்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது கிடையாது. அன்றையதினம் இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் நாடாளுமன்றத்திலே குறிப்பிடும்போது இது ஒரு நீதியற்ற செயல் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஈழத்து காந்தி தந்தை செல்வா அவர்களும் இதுபற்றிக் குறிப்பிடும்போது தமிழர்களை அடிமையாக்கக்கூடிய சட்டம் என்று தொலைநோக்கோடு சொன்னார்கள். இலங்கையில் வாழக்கூடிய தமிழ் மக்கள், இலங்கையில் இரண்டாந்தரக் குடிமக்கள், இலங்கை என்பது சிங்களர் நாடு என்று இலங்கை இராணுவத்தினுடைய இன்றைய தளபதி சரத் பொன் சேகா இன்று சொல்கிறார். ஆனால், ஈழத் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்படும் நிலை 1948-ல் தொடங்கி 1949 ஆம் ஆண்டு வாக்கிலேயே துவங்கி தீவிரமாக நடப்பதற்கு ஆரம்பித்துவிட்டது. சிங்கள மொழிதான் ஆட்சி மொழி, புத்த மதம்தான் ஆட்சி மதம். வேறு நம்பிக்கைகளுக்கு இடம் இல்லை என்று, 1956-ல் சிங்களர்களுக்கு மட்டுமே என்று இலங்கை அரசாங்கத்திலே கொண்டு வரப்பட்டது. அதை எதிர்த்து தந்தை செல்வா தமிழ் மக்களோடு உண்ணாவிரதம் இருந்தார். அந்த உண்ணாவிரத்திலே போலீசாரும் சிங்கள வெறியர்களும் புகுந்து அவர்களைத் தாக்கியதோடு போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி அந்த இடத்திலேயே இரண்டு பேர் சுட்டுப் பொசுக்கப்பட்டு பிணமானார்கள். அதற்குப் பிறகு பல ஒப்பந்தங்கள். 1954-ல் நேரு கொத்தலாவலே ஒப்பந்தம், 1957-ல் தந்தை செல்வா-பண்டாரநாயகா ஒப்பந்தம், 1962-ல் சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், 1965-ல் தந்தை செல்வா-சேனநாயகா ஒப்பந்தம். 1976-ல் மீனவர் உரிமை ஒப்பந்தம். 1987-ல் ராஜிவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தம், இவற்றில் ஒரு ஒப்பந்தத்தைக்கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை. இன்னும்சொல்லப்போனால், பல ஒப்பந்தங்களுக்கு முரண்பாடாகவே இலங்கை அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே அவ்வாறு இருந்திருக்கிறது. தமிழர்கள்

[திரு. மு. கண்ணப்பன்] [2008 நவம்பர் 12

தங்களுடைய நியாயமான உரிமைகளுக்குக் குரல் கொடுத்ததால் அவர்களுடைய வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்பட்டன. தமிழர்களை காவல் துறையும், இராணுவமும் தாக்கின. தமிழ்க் குலக்கொழுந்துகளைக் கருவிலேயே கிள்ளியெறிகின்ற கொடுமைகளில் ஈடுபட்டார்கள். குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். நாசமாக்கப்பட்டார்கள். கற்பழிப்பு, கொலை, கொள்ளை அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. தமிழர் கலாச்சாரத்தினுடைய அடிச்சுவடே இல்லாமல் ஆக்க வேண்டுமென்று சிங்கள இனத்தவர்கள் முடிவெடுத்ததினுடைய விளைவுதான் இவ்வளவு கோரமான சித்திரவதைகள். அந்தச் சித்திரவதைகள் குறித்து Amnesty International உள்ளிட்ட உலக நாடுகளினுடைய ஆய்வாளர்கள் ஆய்வு செய்த அறிக்கைகள் அன்றைய காலக்கட்டத்தில் 1970-71 ஆம் ஆண்டு வாக்கில் உலகத்திலுள்ள அத்தனை ஏடுகளிலும், குறிப்பாக நம்முடைய தமிழகத்திலே இருந்து வரக்கூடிய இந்து நாளேட்டிலே இருந்து அத்தனை நாளேடுகளிலும் அவை வெளிவந்திருக்கின்றன. திரிகோணமலையில் சிவன் கோயிலுக்குத் தேர் செய்து தந்த சிற்பிகள், தச்சர்களை சிங்கள வெறியர்கள் நடு வீதிக்கு இழுத்துவந்து மணிக்கட்டோடு அவர்களுடைய இரண்டு கரங்களையும் துண்டு துண்டாக வெட்டி எறிந்தார்கள். அதே இடத்தில் அந்தச் சிற்பிகள் செத்து மடிந்தார்கள். இப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தன.

*முற்பகல் 10-55*

செஞ்சோலையில் 65 பிஞ்சுக் குழந்தைகள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டார்கள். வாகரை பாடசாலையில் இருந்த அகதிகள்மீது குண்டு வீசி 8 வயது, 10 வயது பெண் குழந்தைகள் 61 பேர் கொல்லப்பட்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரென்ஞ் நாட்டுக்காரர்கள் முகாம் அமைத்து மறுவாழ்வு உதவிப் பணிகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த 17 தமிழ் இளைஞர்கள் சிங்கள வெறியர்களால், சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

வாகரையில் நடைபெற்ற படுகொலையைக் கண்டித்து நடராஜா ரவிராஜ் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் அறப்போராட்டம் நடத்தினார். அறப்போராட்டம் நடத்தினார் என்ற ஒரே காரணத்திற்காக அடுத்த நாள் அவர் வீட்டைவிட்டு வெளியே வந்து

தெருவிலே நடந்துசென்ற நேரத்தில் நடுரோட்டில் குறி வைத்து அவரை சுட்டு வீழ்த்தினார்கள்.

2005 ஆம் ஆண்டு, டிசம்பர் 25 ஆம் நாள் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு தேவாலயத்திற்குச் சென்று ஜெபித்துக்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராஜசிங்கத்தை தேவாலாயத்திற்குள்ளேயே சிங்கள வெறியர்கள் புகுந்து அவரையும் சுட்டுக்கொன்றார்கள். தராகி சிவராம் என்கின்ற ஒரு பெண் பத்திரிகை நிருபர் வெளிநாடுகளுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்த நேரத்திலே அங்கே படுகொலை செய்யப்பட்டார்.

தர்சிணி என்ற 16 வயது பல்கலைக்கழக மாணவி சிங்கள இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டு, வெளியே தெரியாமல் இருக்க கல்லைக் கட்டி கிணற்றுக்குள்ளே போட்டார்கள்; 3 நாட்கள் கழித்து பிணம் மேலே மிதந்தது. பல்கலைக்கழகத்தில் இருக்கிற துணை வேந்தர், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் பார்த்து அறப்போராட்டம் நடத்திய நேரத்தில் அவர்கள்மீதும் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. தமிழ்ப் பெண்களைக் கற்பழித்த சிங்கள இராணுவத்துக்காரர்கள், இனிமேல் உங்களுடைய வயிற்றில் புலிக் குட்டி பிறக்காது, சிங்களக் குட்டிதான் பிறக்கும் என்று பகிரங்கமாக அறிவித்தார்கள். ஒரு இனம் அழிக்கப்படுகின்றபோது தன்னுடைய விடுதலைக்காகவும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் குரல் கொடுத்துதான் ஆகவேண்டும்.

1981-ல் 96 ஆயிரம் புத்தகங்கள், அரிய நூல்கள் கொண்ட யாழ்ப்பாண நூலகம் தீயிட்டுப் பொசுக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு காலகட்டத்தில் அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கின்ற அணுகுமுறையை, இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களை எல்லாம் பாதுகாத்துக்கொள்கின்ற தொலைநோக்கு சிந்தனைகொண்ட அவர்கள் நல்ல அணுகுமுறையை வகுத்தார்கள்.

1983 ஆகஸ்ட் 16 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் பகிரங்கமாகச் சொன்னார்கள். "What is happening in the island of Srilanka is nothing but Genocide of Tamils." ஈழத் தீவிலே தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதை நாடாளுமன்றத்திலேயே பகிரங்கமாக அம்மையார் அவர்கள் தெரிவித்தார்கள்.

[திரு. மு. கண்ணப்பன்] [2008 நவம்பர் 12

1981 ஆம் ஆண்டு மற்றொரு விவாதத்தில் திரு. வைகோ அவர்களின் பேச்சுக்குப் பதில் அளித்துப் பேசுகின்ற நேரத்தில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். "The Tamils of the East and North of Srilanka are the original inhabitants of the land". வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் அந்தத் தீவின் பூர்வீகக் குடிமக்கள். அவர்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்று அம்மையார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நேரத்தில் ஈழத் தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்திலே இருப்பவர்கள் அன்று நாள் முழுவதும் யாரும் சாப்பிடவில்லை. வீட்டுக்கு வீடு கறுப்புக் கொடி ஏற்றினார்கள். அம்மையாருடைய படத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஊர்வலம் வந்தபோது, ஊர்வலத்தில் வந்தவர்களை நோக்கி சிங்களத்து சிப்பாய்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

இன்றைக்கு இலங்கையினுடைய மக்கள் தொகையில் 55 இலட்சம் பேர் தமிழ் இனம் இருந்துகொண்டிருக்கிறது. அதில் 27 சதவிகிதம் பேர் அகதிகளாக இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உலக நாடுகள் பலவற்றில் அனாதைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். உலக வரலாற்றில் தாய் மண்ணை மீட்பதற்குப் போராடி வந்த வரலாறுகள் பல உண்டு. ஆனால், தொடர்ந்து 60 ஆண்டுகளாக ஒரு இலட்சம் பேருக்கு மேல் உயிர்த் தியாகம் செய்து, 15 இலட்சம் பேருக்கு மேல் உலக நாடுகளில் அகதிகளாகவும், மீதியிருப்போர் சொந்த நாட்டிலேயே உண்ண உணவின்றி, நோய்க்கு மருந்தின்றி, இருக்க இடமின்றி, செத்து மடிந்துகொண்டிருக்கின்ற இனம், ஈழ நாட்டிலுள்ள தமிழினத்தைத் தவிர, வேறு உலக நாடுகளிலே வேறு எந்த இனத்திற்கும் ஏற்பட்டது கிடையாது.

முற்பகல் 11-00

அதற்கடுத்து எத்தனையோ நிகழ்வுகள். அவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பதற்கு நேரமில்லை. 2004-ல் மாண்புக்குரிய டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக வந்தபோது இலங்கை, இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் போடத் திட்டமிடுகிறது என்று அறிந்தவுடன், ஒப்பந்தம் போடுவது ஈழத் தமிழர்களுக்குப் பெரும் கேடாக முடியும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதனுடைய பொதுச் செயலாளர் திரு. வைகோ அவர்கள் பிரதமர் அவர்களையும், அம்மையார் திருமதி சோனியா காந்தி

2008 நவம்பர் 12] [திரு. மு. கண்ணப்பன்]

அவர்களையும். மதிப்பிற்குரிய திரு. பிரணாப் முகர்ஜி அவர்களையும், அதேபோல, எதிர்க்கட்சித் தலைவர்களில் முக்கியமானவர்கள், குறிப்பாக, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மறைந்துவிட்ட மாபெரும் தலைவர் திரு. ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்களையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாபெரும் தலைவர் திரு. பரதன் அவர்களையும் சந்தித்ததோடு. மற்ற எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலேயும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அப்போதைக்கு இராணுவ ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

அதற்குப் பிறகு. இராணுவ ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று கேள்விப்பட்டவுடன், முதற்கட்டமாக, ரேடார்கள் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுவிட்டன என்று கேள்விப்பட்டு. மீண்டும் பிரதமரைச் சந்தித்து, அவர்களிடத்திலே இதைக் கொடுக்கக் கூடாது, திருப்பி வாங்க வேண்டுமென்று வலியுறுத்தியபோது, பிரதமர் அவர்கள் சொன்ன வாசகங்கள், 'போர் மூளுகின்ற நிலைமை வந்தால் நாங்கள் நிச்சயமாக அதைப் பரிசீலிப்போம்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள்.

பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது 1998-ல் இப்படியொரு உடன்பாடு ஏற்படப்போகிறது என்று தெரிய வந்தபோது அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்தபோது, உடனே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டது. அனைத்து கட்சியினரும் விவாதித்து, இலங்கைக்கு இராணுவ உதவி ஏதும் செய்வதில்லை என்றும், ஆயுதங்களைக்கூட விற்பதில்லை என்றும் ஒருமனதாக அன்றைக்குத் தீர்மானம் செய்யப்பட்டது. அந்த அனைத்து கட்சித் தீர்மானம் இன்றைக்கும் அப்படியேதான் இருக்கிறது. மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படவில்லை; தீர்மானங்கள் மாற்றப்படவில்லை. ஆனால், இன்றைக்கு இலங்கைக்கு இந்திய அரசு இராணுவ உதவி செய்துகொண்டிருக்கிறது.

டிசம்பர் 2001, கிறிஸ்துமஸ் தினத்தில் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தார்கள். ஒரு மாதம் பொறுத்திருந்து பார்த்தார்கள், அரசுத் தரப்பிலேயிருந்து பதிலில்லை. மீண்டும் தொடர்ந்து ஒரு மாதம் போர் நிறுத்தத்தை நீட்டிக்கிறோம் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு. இலங்கை அரசாங்கத்தின்மீது சர்வதேச நாடுகளுடைய பழி வந்துவிடக் கூடாது என்று பயந்து, 2002 பிப்ரவரியில் இலங்கை அரசும் போர் நிறுத்தத்தை அறிவித்தது. அதற்குப் பிறகு. நார்வே நாட்டில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால். போர் நிறுத்தம்

[திரு. மு. கண்ணப்பன்] [2008 நவம்பர் 12

அறிவிக்கப்பட்டதே தவிர, தொடர்ந்து ஆங்காங்கே மோதல்கள், சிறு சிறு சண்டைகள், பல உயிர்ச் சேதங்கள், தமிழர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்படுதல், பல இடங்களில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது. இவைகளெல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருந்தன.

2008 ஜனவரியில் இலங்கை அரசு ஈழத்தமிழர்கள்மீது மீண்டும் முழுப் போரைத் தொடங்கினார்கள். இலங்கை இராணுவத் தாக்குதல்களிலிருந்து தமிழ்மக்களைக் காப்பாற்றுகின்ற தடுப்பு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார்கள். உடனடியாக புலிகள் தரப்பில் போர் நிறுத்தம் செய்வதற்கு நாங்கள் தயார் என்று முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய முடியாது என்று பகிரங்கமாகவே அறிவித்துவிட்டது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு தீர்மானம், முன்மொழியப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தை மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில் வரவேற்கிறோம்.

*முற்பகல் 11-05*

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அந்தத் தீர்மானத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அந்தத் தீர்மானத்திலே நாங்கள் கூடுதலாக சேர்க்கச் சொல்வது, "இலங்கை விமானப் படைக்கு வழங்கியுள்ள ரேடார் கருவிகளை இந்தியா திரும்பப்பெற வேண்டும். இலங்கைக்கு அனுப்பியுள்ள தொழில்நுட்ப வல்லுநர்களையும், இராணுவத்தினரையும் திரும்ப அழைக்க வேண்டும். குறைந்த வட்டியில் இலங்கைக்குத் தருவதாகச் சொன்ன கடனை இரத்து செய்ய வேண்டும். இந்தியா, இலங்கை கடற்படை செய்துகொண்ட தகவல் பரிமாற்ற ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும். இலங்கை இராணுவத்திற்கும், விமானப் படைக்கும் இந்தியாவில் அளிக்கும் பயிற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழர்கள்மீதான தாக்குதல்களை இலங்கை அரசு உடனடியாக நிறுத்திவிட்டு, போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும். முறிந்துபோன பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற வகையில் உடனடியாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவைகளையெல்லாம் இலங்கை அரசு

2008 நவம்பர் 12] [திரு. மு. கண்ணப்பன்]

செய்ய மறுத்துவிட்டால், செய்ய முன்வராவிட்டால் தூதரக உறவை முறித்துக்கொள்ளப் போவதாகவும், பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தப் போவதாகவும், இந்தியா, இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும்" என்று அந்தத் தீர்மானத்தோடு இதையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, தீர்மானத்தை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசும்போது சொல்லலாம். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, ஒரே ஒரு amendment. My humble request இதிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அளிக்கக்கூடாது என்று வேண்டுகோள்தானே வைக்கிறார். இல்லை என்றுதான் சொல்லிவிட்டீர்களே! *(குறுக்கீடுகள்)* சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது, இந்திய அரசு ஏற்கெனவே அங்கே ஆயுதப் பயிற்சி அளிப்பதாகவும், ஆயுதங்களைத் தந்திருப்பதாவும், ரேடார்களை வழங்கியிருப்பதாகவும், எல்லாவற்றையும் ஏதோ மத்திய அரசு செய்ததைப் போலவே அவர்கள் முழுக் கருத்தையும் இங்கே பதிவு செய்து, இப்போது சபையினுடைய குறிப்பில் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு அவற்றையெல்லாம் முழுமையாக மறுத்திருக்கக்கூடிய சூழலில் இப்போது நல்ல ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில், சில வார்த்தைகளையெல்லாம் மிக அருமையாகப் போட்டு, எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, அதிலே சில திருத்தங்களைக் கொண்டுவந்து, இன்று மத்திய அரசு செய்யாததையெல்லாம் செய்தது என்று சொல்லி இப்படி இவர்கள் பதிவு செய்வதும், மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதும் சரியான ஒரு சூழல் அல்ல. ஆகவே, அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்துகிறேன்.

[2008 நவம்பர் 12

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இட்டுக்கட்டியோ, இல்லாத ஒன்றையோ, சொல்லவில்லை. 2008 அக்டோபர் 2 ஆம் தேதியன்று இந்திய நாட்டினுடைய பிரதமர், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அவரே குறிப்பிட்டிருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய தமிழர்களுடைய நிலைமைகளையெல்லாம் ஏற்கெனவே, வைகோ எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டதற்கு பதில் சொல்லிவிட்டு, இந்த இராணுவ உதவி, இவைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் கடைசியாக முடிக்கும்போது, 'Meanwhile, Sri Lanka has been provided some assistance of a defensive nature to protect its integrity and unity. We are committed to unity and integrity of Sri Lanka alongside protecting the rights of the Tamils and hence cannot ignore the fact' என்று அந்தக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரதமர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற மேலவையில் பிரணாப் முகர்ஜி அவர்கள் பேசும்போதும், நாங்கள் உதவி வழங்கியிருக்கிறோம், வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சென்ற வாரம்கூட அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இல்லாததை நாங்கள் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல்கிறோம். அதற்கான ஆதாரம் என்னுடைய கையில் இருக்கிறது. நான் அதை பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே ஒப்படைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்திருக்காதீர்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடு)* சொல்லுங்கள், திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒருமனதாக அனைத்துத்தரப்பு சட்டமன்ற உறுப்பினர்களும், மத்திய அரசை வலியுறுத்தி அங்கே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற, முன்மொழியப்பட்டிருக்கிற அந்தத் தீர்மானத்தை வழிமொழிய வேண்டும். நாமும் அப்படியே ஏகமனதாகத் தீர்மானத்தை Pass செய்ய வேண்டும் என்று சொன்னால், இப்படிப்பட்ட தேவையற்ற சில வார்த்தைகளை நீங்கள் இங்கே புகுத்தி, அதை அவைக் குறிப்பில் ஏற்றி, இன்னும் பிரச்சினைகளை நீங்கள் உருவாக்குவீர்கள் என்று சொன்னால், போர் நிறுத்தம் நீங்கள் எதிர்பார்த்தபடி அங்கே நடக்குமா, மத்திய அரசையே நீங்கள் குற்றம் சொல்லிவிட்டு, நீங்கள் தலையிட்டு அதை நிறுத்துங்கள் என்று

2008 நவம்பர் 12] [திரு. சி. ஞானசேகரன்]

சொன்னால், அதைச் செய்யுமா, இவற்றையெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து, அவற்றையெல்லாம் நீக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி சார்பாக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**திரு. மு. கண்ணப்பன்:** நான் கொடுத்த திருத்தத்தை சபைதான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அல்ல. ஆகவே, சபை முடிவு செய்யட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான முன்முயற்சியாக பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பிலே தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலேயும் நாங்கள் தனித் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும், இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய வகையிலே, அரசினர் தீர்மானமாக இதை உருவாக்கி, இதை இந்த அவையிலே முன்வைத்து, இதை ஒருமனதாக நிறைவேற்றுவதற்கான முன்முயற்சி எடுத்திருக்கிற நமது தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே முன்னதாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின்மூலமாக இலங்கையிலே அமைதி தவழச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நம்புகிறோம்.

குறிப்பாக, இதிலே தீர்மானம் தேவையான அளவுக்கு இருக்கிறது என்றாலும், இதன்மீது சில கருத்துகளை, அந்தந்த அரசியல் கட்சிகளுக்குரிய கருத்துகளைச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகத்தான் நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதிலே மாறுபட்ட கருத்துகள் இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்று நேற்றையதினமே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை இந்த அவையிலே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் அறிந்தவர்கள்தான். ஆகவே, மாறுபட்ட கருத்து இருப்பதைப் பற்றியும் பதிவு செய்வது தவறாக ஆகாது என்பதை தயவுசெய்து பொறுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருமனதான தீர்மானத்தை நம்முடைய முதல்வர் அவர்களும் இந்த அவையும் ஏற்று

அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நிலைப்பாடு.

குறிப்பாக, இந்தச் சம்பவங்களை குறிப்பிட்டு சொல்கிறபோது, தொடர்ந்து, இலங்கையிலே 4 இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுவிட்டார்கள். இவர்கள் 15 இடங்களுக்கு மேலே மாறி மாறி குடியேறி வருகிறார்கள். இவர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள் என்ற செய்தி வந்து கொண்டே இருக்கிறது. இவர்கள் காடுகளிலே இரவிலே பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கு ஆளாகிறார்கள் என்ற செய்திகள் எல்லாம் வருகின்றன. சுமார் 400 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பாம்புக்கடியினாலும் மலேரியா போன்ற நோய்களாலும் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார்கள் என்ற செய்திகள் வருகின்றன.

அதேபோல, அகதிகள் முகாம் என்ற முறையிலே பார்த்தால், வன்னிப் பிரதேசத்திலே கிட்டத்தட்ட 2½ இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலே அரசு முகாமிலே 1½ இலட்சம் பேர்கள் அகதிகளாக இருக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது. கிழக்கு மாகாணத்திலே 1¼ இலட்சம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கிறார்கள். இப்படி அகதிகளாகவே 4 இலட்சம் பேர்கள் அந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கொடூரமான செய்தி வந்து கொண்டிருக்கிறது. தலைநகர் கொழும்புவிலே வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களிலே ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் காணவில்லை என்ற செய்தி வருகிறது. அந்த இராணுவத்தினரால் அவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள், எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியே இல்லை என்று வருகிறது. இந்தப் பாதிப்புகளுடைய விளைவு என்றைக்கு இலங்கையிலே யுத்தம் தொடங்கி அது ஒரு மூர்க்கத்தனமான கட்டத்தை அடைந்திருக்கிறதோ, அதற்குப் பின்னாலேதான் தமிழகத்திலேயும் அந்தப் பாதிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இதை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

குறிப்பாக தமிழகத்திலே நம்முடைய மீனவர்களுடைய பிரச்சினை என்பது எதிலிருந்து வருகிறது? எப்பொழுது இலங்கையில் யுத்தம் நடைபெறுகிறதோ, அதன் பாதிப்புகளின் தாக்கத்தின் காரணமாகத்தான் இங்கே தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக்

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

கொல்லப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். 400-க்கும் மேற்பட்ட மீனவர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள். மீனவர்கள் கடல் எல்லை தாண்டுவது என்பது இந்தியாவிலே பல மாநிலங்களில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், தமிழக மீனவர்கள் மட்டும்தான் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இது பலமுறை இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான காரணங்கள் என்று சொல்கிறபொழுது தமிழகக் கடல் எல்லை என்பது சுமார் 1,100 கிலோ மீட்டர் எல்லையைக் கொண்டிருப்பதாக இருக்கிறது. 13 மாவட்டங்களை உள்ளடக்கி இருக்கிறது. இந்தக் கடல் எல்லை மாவட்டங்களிலே இருக்கிற சுமார் 15 இலட்சம் மக்கள், மீனவ மக்களோடு இணைந்த மக்கள், 15 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இலங்கையிலே போர் நடைபெறுகிறது என்று சொன்னாலே, நேரடியாக இங்கே தமிழகத்திலே மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள், சுடப்படுகிறார்கள். இது அன்றாட நிகழ்வாக நடைபெறுகிறது. நேற்று முன்தினம்கூட சிங்களப் படையினரால் நமது இராமேஸ்வரம் மீனவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், நிர்வாணப்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படித் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறபொழுது தமிழகத்திலே இதன்மீது உணர்வுகளும், கோபங்களும் இயல்பாகவே வருவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்பதை மறுக்கக்கூடாது என்பது என்னுடைய பணிவான கருத்து. ஆகவே, இந்த நிலைமையில் இந்த உணர்வுகளின் அடிப்படையிலேதான் கருத்து வருகிறதே தவிர, இது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வருகிறது என்று தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பணிவான கருத்து. இலங்கை இராணுவத்தால் சுடப்பட்டு இறந்தவர்கள் 400 பேர்கள். 2,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நிரந்தரமாகவே ஊனமாகிவிட்டார்கள். இதுவரையிலே காணாமல் போன 95 பேர்களுடைய கதி என்னவென்றே தெரியவில்லை. ஆனால், அவர்களுடைய மனைவிகள் இன்றைக்கும் தாலியை கழுத்திலே அணிந்துகொள்வதா, கழற்றுவதா என்றப் பிரச்சினையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் தமிழகத்திலே இருக்கின்றன. துப்பாக்கிச் சூடு என்று கணக்குப் பார்க்கிறபொழுது இலங்கை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்கிறதோ, இல்லையோ, கணக்குரீதியாக இதுவரையில் 8,000-க்கும் மேற்பட்ட முறை துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. ஆகவே, இதையெல்லாம் பார்க்கிறபொழுது,

கடல் எல்லையைத் தாண்டினார்கள் என்ற காரணம் மட்டும் சொல்லப்படுகிறது. ஆனால், பிரச்சினை என்பது இலங்கையிலே நடைபெறுகிற போரின் காரணத்தினாலே இலங்கை இராணுவம் நம்முடைய தமிழக மீனவர்களை இப்படிக் கண்மூடித்தனமாகச் சுட்டுப்போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். கடல் எல்லைகள் என்று வருகிறபொழுது என்ன நிலைமையாக இருக்கிறது? இராமேஸ்வரத்திலே கடல் எல்லை 11 மைல்கள்தான் இருக்கிறது. கோடியக்கரையிலே 13 மைல்கள்தான் இருக்கிறது. தனுஷ்கோடியிலே 6 மைல்கள் எல்லைதான் இருக்கிறது. இந்த 6 கடல் மைல்கள் அளவிலே அப்படியே சரியாக மீன் பிடிக்க வேண்டும் என்ற நிலையை மட்டும் சொல்வதாக இது அமைந்திருக்கிறது. ஆகவே, இந்தக் கடல் எல்லைகள்கூட மிகச் சுருக்கமாக இருக்கிற காரணத்தினாலே அன்றாட நிகழ்வுகளைச் செய்து கொண்டிருக்கிற இந்த மீனவர்கள் கொஞ்சம் கடல் எல்லையைத் தாண்டிவிட்டாலே அதை ஒரு பிரச்சினையாக மாற்றுவதற்கான முயற்சியை இலங்கை இராணுவம் எடுத்துக்கொண்டேயிருக்கிறது. இதனாலும் இந்தத் துப்பாக்கிச் சூடுகள் நடைபெறுகின்றன. ஆகவே, இலங்கையிலே நடைபெறுகிற போர் என்பது இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாக ஆக்கப்படுவது மட்டுமல்ல, சுட்டுக் கொல்லப்படுவது மட்டுமல்ல, குழந்தைகள் சுடப்படுவது மட்டுமல்ல, அவர்கள் நாடற்றவர்களாக, அனாதைகளாக ஆக்கப்படுகிற கொடூரமான காரியம் இலங்கையிலே நடைபெறுகிறபொழுது தமிழக மீனவர்களும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்று சொன்னால், இதற்கு ஆதரவாக மாறுகிறார்கள் என்ற காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மை அதுவல்ல. இங்கிருந்து ஏற்படுகிற இந்த நிலைமைகள், இந்தக் கொந்தளிப்புகள், இந்த உணர்வுகளையும் இணைத்தே அடக்குவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சி எடுக்கிறது. இதை எப்படித் தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? இதிலே இனவாதத்தைப் பற்றிப் பேச முடியுமா? தீவிரவாதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்க முடியுமா? தீவிரவாதம், இனவாதம், அதிதீவிரவாதங்களிலெல்லாம் எங்களுக்கு உடன்பாடில்லை. ஆனால், இதை முன்னிறுத்தி இலங்கையிலே தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை நியாயப்படுத்துவது எந்தவகையிலும் பொருத்தமானது இல்லை என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. இதனால்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இதிலே ஒற்றுமை உணர்வு தேவைப்படுகிறது. ஒருமைப்பாட்டோடு நாம் முடிவு எடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

முற்பகல் 11-20

குறிப்பாக, பங்களாதேஷ் யுத்தம் எப்படி வந்தது? பங்களாதேஷ் யுத்தம் வந்ததிலே மிகப் பெரிய முக்கியமான காரணமாக கருதப்பட்டது என்பது, அந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் அகதிகளாக இந்தியாவிற்கு இலட்சக்கணக்கிலே வந்துகொண்டேயிருந்தார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறபொழுது அதுவே ஒரு சுமையாக நம்முடைய நாட்டிற்கு வருகிறபொழுதுதான் அன்னை இந்திரா அவர்கள் அதிலே ஒரு முடிவெடுத்து அந்த யுத்தத்தையும் நடத்தி, அந்த நாட்டைத் திருப்பிக் கொடுப்பதற்குரிய முயற்சிகளை எடுத்தார்கள். ஆகவே, இப்பொழுது என்ன நிலைமை இருக்கிறது? இலங்கைத் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கிலே அகதிகளாக நித்தம் நித்தம் வந்துகொண்டே இருக்கிறார்கள் என்று சொல்கிறபொழுது தமிழக மக்களுடைய உணர்வு பாதிக்கப்படுகிறது, அதுவே வேகப்படுகிறது, கடல்வாழ் எல்லைகளிலே இருக்கக்கூடிய 13 மாவட்டங்களில் வாழ்கிற 15 இலட்சம் மக்களுடைய உணர்வாக மாற்றப்படுகிறது. அந்த உணர்வுகள் கொந்தளிப்பாக மாறுகிறது. அப்படி வருகிறபொழுது தமிழகத்திலே இதைப்பற்றிப் பேசாமல், கூறாமல், கருத்து சொல்லாமல் இருக்க முடியாது. இதிலே கூடுதல், குறைவான சில காரியங்கள் இருக்கின்றன. உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதன்மீது தடை விதிக்கப்படுகிறது. அவை கட்டுப்படுத்தப்படுகிறது. எல்லாமும் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெற வேண்டுமென்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இது உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம் என்கின்ற முறையிலே அதை ஆழமாகப் பார்க்க வேண்டிய அவசியம் தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, அங்கே தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் எல்லாம் இலங்கையிலே ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். போர் நிறுத்தம் செய்ய வேண்டும்; எல்லாவற்றுக்கும் உடன்பாடு காணுவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்ற கருத்து அங்கேயும் சொல்லப்பட்டது; இங்கேயும் வந்து சொல்லியிருக்கிறார்கள். இதிலேகூட குழுக்களுடைய முறைகளைப் பற்றியெல்லாம் பேசினோம். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒரு தடவை இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, அவர்களுக்குள் எத்தனை குழுக்கள் இருக்கின்றன, அவர்களுக்குள்ளே சகோதர சண்டை போட்டுக்கொண்டு எத்தனை பேர்கள் மாண்டார்கள் என்ற செய்திகளையெல்லாம் சொன்னார்கள். ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 நவம்பர் 12

அந்தக் குழுவினுடைய கருத்தைப் பார்க்கிறபோது, அதிலேயே பல்வேறு குழுக்கள் இருக்கிறார்கள். E.P.R.L.F. இருக்கிறது; TELO இருக்கிறது; PLOT இருக்கிறது; இதைப்போன்ற அமைப்புகளை உள்ளடக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே இணைந்துதான் இந்தப் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள். ஆகவே, இதிலே பிளவுகள் ஏற்பட்டன என்பது உண்மைதான் என்றாலும்கூட போர் நிறுத்தம் செய்து அமைதியான சூழ்நிலையை உருவாக்கி, ஒரு அரசியல் தீர்வு கண்டு, இலங்கைத் தமிழர்களுக்கு உரிமைகளையும், கடமைகளையும் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை அங்கேயிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் நாம் கவனத்திலேகொள்ள வேண் அவசியமிருக்கிறது.

இதையெல்லாம்தாண்டி, 2006 ஆம் ஆண்டு நார்வே நாட்டினுடைய முன்முயற்சியாலே இலங்கையிலே போர் நிறுத்த ஒப்பந்தம் போடப்பட்டது. நார்வே நாட்டு முன்முயற்சியாலே போர் நிறுத்த ஒப்பந்தம் போடப்பட்டதற்குப் பின்னாலே அங்கே போர் நிறுத்தத்தை ஒரு தரப்பாக இரத்து செய்தது இலங்கை அரசுதான். 2006 சனவரி 16 ஆம் தேதி போர் நிறுத்த அறிவிப்பை ராஜபக்சே அரசு அறிவித்துவிட்டது. ஆகவே, நார்வே நாட்டின் முன்முயற்சியால் எடுக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஒரு தரப்பாக இரத்து செய்தது இலங்கை அரசுதானே தவிர, இப்பொழுது எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகள் அல்ல. ஆகவே, ஒப்புக்கொண்டதை மீறியது இலங்கை அரசு. இதைச் சொல்கிறபோது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்று சொன்னால் என்ன சொல்ல முடியும்? இதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, போர் நிறுத்தத்தை அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். யுத்தத்தை துவக்கியவர்கள் இலங்கை ஆட்சியாளர்கள்தான்.

ஆகவே, திரும்பவும் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று கோருகிறபோதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். அந்த வேண்டுகோள் என்பது அவருடைய அனுபவத்தின் அடிப்படையிலே வெளிப்படுத்தப்பட்ட வேண்டுகோள். அனைத்து அரசியல் கட்சிகளும், குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைப் பற்றியெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம்.

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

அதனுடைய உணர்வுகளும் எண்ணங்களும், எதிர்பார்ப்புகளும் என்னவாக இருக்கும் என்பதை இங்கே பேசுகிற நம் அனைவரையும்விட, ஆழமாகப் புரிந்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள். ஆகவே அந்த விஷயத்தைப் பற்றி அவருக்குத் தெரியும். அதனால்தான் சொன்னார். போர் நிறுத்தம் என்றால் ஒரு தரப்பாக மட்டும் இருக்க முடியாது. இரு தரப்பும் அதை ஏற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பு வர வேண்டுமே என்ற அவருடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் அவர்களும் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். விடுதலைப் புலிகள் போரை நிறுத்த வேண்டும் என்று பகிரங்கமாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அதைப்போல, இன்றைக்கு வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்கள் தரப்பிலே ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் ஆலோசகர் நடேசன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். போரை நிறுத்துவதற்கு நாங்கள் தயார் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இலங்கை அரசு அது முடியாது என்று திட்டவட்டமாக அறிவிக்கிறது. அப்படியானால், அவர்கள் மீதம் இருக்கிற தமிழ் மக்களையும் கொன்று குவிப்பது என்பதிலே உறுதியாக இருக்கிறார்கள். ஆனால், நாம் பேசுவது என்பது விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்குமான யுத்தம், யுத்தம் என்று பேசுகிறோமே, இதிலே பாதிக்கப்படுபவர்களும் சாவுக்கு ஆளாக்கப்படுபவர்களும் யார்? அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். மாணவர்கள் கொல்லப்படுகிறார்கள். கோயில்கள்மீது குண்டு மழை பொழிகிறது. பள்ளி, கல்விக்கூடங்கள்மீது குண்டு மழை பொழிகிறது. இப்படியாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறபோது, அப்பாவி தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டு, யுத்தத்தின்மூலமாக வெற்றியைக் காண வேண்டுமென்று இலங்கை அரசு துடிக்கிறபோது, அதை நாம் பார்த்துக்கொண்டு, கைகட்டிக்கொண்டு சும்மா இருக்க முடியாது. ஆகவேதான் இந்த உணர்வுகளின் அடிப்படையிலே விரைவாகத் தீர்வு காண வேண்டிய அவசியம் இருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. குறிப்பாக, நார்வே, சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகள் எல்லாம் இந்தப் போர் நிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளை எடுத்ததிலே, திரும்பவும் போரை நடத்திய இலங்கை அரசைக் கண்டித்திருக்கின்றன. உலக நாடுகளே கண்டித்திருக்கின்றன. அதைப்போல அமெரிக்க நாடும் அதைக் கண்டித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையினுடைய பொதுச் செயலாளர் பான் கி-மூன் அவர்களே குறிப்பிட்டுச்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 நவம்பர் 12

சொல்லியிருக்கிறார்கள். யுத்தத்தின்மூலமாகத் தீர்வு காண இயலாது; அரசியல் தீர்வுதான் அதற்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். அதைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையினுடைய பொதுச் செயலாளர் தெளிவாக அறிவித்திருக்கிறார். ஆனால், உலக நாடுகளினுடைய கோரிக்கை, ஐக்கிய நாடுகள் சபையினுடைய கோரிக்கை, இந்தியாவினுடைய கோரிக்கை, தமிழக மக்களுடைய உணர்வு இவை எதையுமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத நிலையிலே இலங்கை அரசு இருக்கிறது என்பதுதான் இன்றைக்கு யதார்த்தமான நிலை.

முற்பகல் 11-25

இந்த நிலைகளை மாற்றுவதற்குரிய முயற்சியாகத்தான் தமிழகத்திலே அரசியல் கட்சிகள் எல்லாம் பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கின்றன. இதற்கு முதன்மையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அக்டோபர் 2 ஆம் தேதி உண்ணாவிரதப் போராட்டத்தை மாவட்டத் தலைநகரங்களிலே நடத்தினோம். அதற்குப் பின்னதாக நம்முடைய சர்வ கட்சிக் கூட்டம் அக்டோபர் 14 ஆம் தேதி நடத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே திரைப்படக் கலைஞர்களுடைய உண்ணாவிரதம், போராட்டம், ஆர்ப்பாட்டம், பேரணி, மிகச் சிறப்பான மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் சென்னையிலே நடத்தப்பட்டிருக்கிறது. ஆக, இவற்றையெல்லாம் நமது மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று இலங்கையிலே அமைதி காணவேண்டுமென்பதற்குரிய முயற்சியாக நாம் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், இதன்மீது மத்திய அரசாங்கத்தினுடைய கவனம் வேகமாக இல்லை என்பதுதான் நம்முடைய வருத்தமான குற்றச்சாட்டாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்கிறபோது இதிலே அரசியலைப் பார்க்க முடியாது. ஒரு அண்டை நாடு என்ற முறையில் 7 கோடி தமிழர்களுடைய உணர்வுகளாக வந்திருக்கிற இந்த நிலைமைகளை மத்திய அரசாங்கம் அறிந்து, புரிந்து அதற்கு விரைவாகத் தீர்வு காணுவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமே தவிர, காலங்கடத்துவது என்பது அந்த நாட்டிலே அமைதியை ஏற்படுத்தாது, தமிழ் மக்களைப் பாதுகாக்காது, காலங்கடத்துவதன்மூலமாக படுகொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறது. இதை உடனடியாக மத்திய அரசாங்கம் செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்று நாங்கள் அழுத்தமாக நம்புகிறோம்.

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

இப்போது இலங்கை அரசினுடைய அதிபர் நம்முடைய நாட்டிற்கு வந்திருக்கிறார். அவருடன் இப்போது பேச்சுவார்த்தையை உடனடியாக நடத்த வேண்டும். ஒரு கருத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். ஒரு அண்டை நாடு என்று சொல்கிறபோது, தலையீடு என்று சொல்கிறபோது அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்று காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், படுகொலைகள் நடந்துகொண்டிருக்கிறபோது ஒரு அண்டை நாடு என்ற முறையிலே உணர்வு ரீதியாக நமது தமிழகம் சேர்த்து பாதிக்கிறபோது, இந்த உணர்வு நிலைகளைப்பற்றி மத்திய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டாமா? பல செய்திகள் வருகின்றன, பத்திரிகைகளிலே பார்க்கிறேன். இதுவே வேறு ஒரு மாநிலத்திலே என்ன பிரச்சினையாக வருகிறது? பீகாரிலே என்ன உணர்வு வருகிறது? உத்தரபிரதேசத்திலே என்ன உணர்வு வருகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதையெல்லாம் பார்க்கிறபோது தமிழகத்திலே அந்த உணர்வு வரும் என்பதை எப்படி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். ஆகவே, இந்த உணர்வுகளையெல்லாம் மத்திய அரசு மதிக்க வேண்டும். எல்லா மாநில உணர்வுகளையும் ஒருங்கிணைத்து அதற்குத் தீர்வு காணுவதற்கான முயற்சியை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து.

இங்கே சகோதரர் ஞானசேகரன் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இங்கே ம.தி.மு.க.-வினுடைய தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கக்கூடிய செய்திகள், நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற நிலைமைகள், நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துகள், எல்லாவற்றையும், ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மத்திய அரசினுடைய இராணுவ உதவி இலங்கைக்கு இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அங்கே இராணுவத் தளவாடங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. தமிழகத்திலேயே அதற்கான பயிற்சிகள் நடைபெற்றன என்று இந்த அவையிலேயே சென்ற ஆண்டு நாம் விவாதித்திருக்கிறோம்.

இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும், அப்படிப்பட்ட காரியம் நடைபெறாமல் பார்க்க வேண்டுமென்று சொல்கிறபோது நம்முடைய முதலமைச்சர் அவர்களே தலையிட்டிருக்கிறார்கள். ஆகவே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிக்கொண்டிருக்கிற இந்தச் செய்திகள் எல்லாமே இந்த அவையிலே பேசப்பட்டு பதிவு செய்யப்பட்ட... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தபிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக, மத்திய அரசாங்கம், அண்டை நாடு என்ற முறையிலும், நம்முடைய தமிழ் மக்களுடைய உணர்வு என்ற அடிப்படையிலேயும் அப்படிப்பட்ட காரியங்களை நிறுத்தி உடனடியாகத் தீர்வு காணுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக உலக நாடுகளுடைய கருத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டு தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தொடர்ந்து பல நாட்டுப் படைகளையும் வைத்துக்கொண்டு அந்தக் காரியத்தைச் செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். (குறுக்கீடுகள்) ரஷியா என்ன சொல்கிறது, சீனா என்ன சொல்கிறது என்று இங்கே நண்பர்கள் கேட்கிறார்கள். சீனா படையை அனுப்பினாலும் தப்புதான். அதற்கு எதிராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாகக் குரல் கொடுக்கும். ரஷியா செய்தாலும் தப்புதான். அண்டை நாட்டிலே இப்படி ஒரு பாதிப்பு ஏற்படுகிறது என்ற நிலையிலே, தமிழ் மக்களுடைய உணர்வு என்ற நிலையிலே அந்தக் கருத்தை நாங்கள் மறுப்பதற்கில்லை. அதை ஆதரிக்கவும் மாட்டோம். ** (குறுக்கீடுகள்) அதனாலே நான் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) இந்த விஷயத்தின்மீது குறிப்பாக விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டிருக்கிற காரணத்தினாலே இந்த போர் நிறுத்தத்தை உடனடியாக செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) குறிப்பாக.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 நவம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் நீங்கள் முடிக்கிறீர்களா. என்ன? (குறுக்கீடு) பொறுங்கள். பொறுங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். அதற்குப் பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்ததற்குப் பின்னாலே அவர்கள் பேசலாம். அவர்கள் அவர்களுடைய கருத்தைச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடனே உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன் (குறுக்கீடுகள்)

(முறபகல் 11-30)

**திரு. டி. சுதர்சனம்:** காங்கிரஸ் கட்சியைப் பற்றிப் பேசிய வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனம், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கூறிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தோழர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் பல்வேறு கருத்துகளை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துகளுக்கு மறுப்பு சொல்வதற்கான வாய்ப்பு வரும் என்பதற்காக அமைதியாகக் காத்திருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், ** என்று சொன்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வார்த்தையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு நாங்கள் பதில் சொல்வதாக இருந்தால், அவர் தாங்கிக்கொள்ளமாட்டார். எனவே, அந்த வார்த்தைகள் இந்த அவை மரபுக்கு எதிரான வார்த்தைகள் என்பதால், அந்த வார்த்தைகளை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இலங்கைப் போர் நிறுத்தத்திற்கான இந்தத் தீர்மானம் என்பது *(மணியடிக்கப்பெற்றது)* இல்லை, முடித்துவிடுகிறேன்.

**HON. SPEAKER:** Mr. Sivapunniam, don't make it controversial. சீக்கிரம் உரையை முடியுங்கள். *(குறுக்கீடுகள்)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் சிலர் இருக்கைகளில் அமர்ந்துகொண்டே, திரு. வை. சிவபுண்ணியத்தை நோக்கி ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இருங்கள், எங்களுக்கும் உங்களைத் தெரியும். இப்போது என்ன விஷயம் என்றால், *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசிவிட்டீர்கள்; நான் பேசாமல் இருக்கிறேன். நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்; வீணாகக் கிளப்பக் கூடாது. காங்கிரஸ் கட்சித் தலைவருக்குப் பணிவான வேண்டுகோள். திரு. பீட்டர் அல்போன்ஸ் அண்ணன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நான் அதை மறுக்கவில்லை. அடுத்த விஷயத்தைப் பற்றிப் பேசும்போது, பின்னாலிருந்து பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அதுவும் மிரட்டுகிற தொனியில் பேசினால், அது சரியாக இருக்காது. உங்களுடைய உறுப்பினர்கள் மிரட்டுகின்ற பாணியில் நடந்துகொள்வது நல்லதல்ல.

இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இலங்கையில் அமைதி காணபதற்கு உடனடியான முயற்சியாக, போரை நிறுத்த வேண்டும். இலங்கை அதிபர் இந்தியாவிற்கு வருகை தந்திருப்பதைப் பயன்படுத்தி, நம்முடைய திரு. மன்மோகன் சிங் அவர்கள் உடனடியாகப் போர் நிறுத்தத்தை

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

வலியுறுத்த வேண்டும். இதிலே கால நீடிப்பு என்பது கூடாது. இதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அங்கேயிருக்கிற அனைத்து அமைப்புகளையும் உடனடியாக அழைத்துப் பேசி, அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும். அதன்மூலமாகத்தான் இலங்கையிலே அமைதி நிலவுவதோடு தமிழகத்திலேயும், இந்தியாவிலேயும் அமைதியை நிலவச் செய்ய முடியும். தமிழகத்திலேயும் இப்படிப்பட்ட ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான முயற்சியாக இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி, மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கைகளை உள்ளடக்கிய, இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும்; தமிழ் மக்களின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும்; சுமூகமான பேச்சுவார்த்தையை அங்கு நடத்தி, அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக நமது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த இத்தீர்மானம் மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஏற்புடையதாக அமைந்திருக்கிறது என்ற முறையிலே, இத்தீர்மானத்தை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதே சமயத்தில், இந்தச் சபையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் இருக்கக்கூடிய இந்த நேரத்தில் பல்வேறுபட்ட கருத்துகளைக் கொண்டதுதான் ஜனநாயகம். வேறுபட்ட கருத்துகளாக இருந்தாலும், அவற்றை வாங்கிக்கொள்வதற்கும், தாங்கிக்கொள்வதற்குமான ஒரு ஜனநாயக அரசியல் பண்பாட்டை வளர்த்துக்கொண்டு, நமது இந்திய நாட்டினுடைய இறையாண்மைக்குக் குந்தகம் வராமல், இலங்கைப் பிரச்சினையில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டுமென்று வழிகாட்டுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையினுடைய போர்ச் சூழலால், நிராயுதபாணிகளான தமிழ்க் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உயிரிழப்பும், உடைமைகள் இழப்பும் தொடர்ந்து கொண்டிருப்பது

நம்மை வேதனை கொள்ளச் செய்கிறது. இலங்கையில் அப்பாவித் தமிழர்கள்மீதான மனிதநேயமற்ற தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மனித உரிமை மீறல் எந்த நாட்டில் நடந்தாலும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி அதைக் கவலையோடு பார்க்கிறது. இலங்கை அரசு நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கு முன்வர வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தில் பொருத்தமாக இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். போர் நிறுத்தம் என்பது இலங்கை அரசின் தரப்பில், 'நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கு முன்வர வேண்டும்' என்ற வார்த்தையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பரிந்துரை செய்கிறேன்.

*முற்பகல் 11-35*

இப்போர் நிறுத்தம் அறிவிக்கப்படுவதோடு, அமலாக்கம் செய்யப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படவும் வேண்டும். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாகப் பரிசீலிக்க நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உலகமயம், தனியார்மயம், தாராளமயம் போன்ற முதலாளித்துவ சமூக அமைப்பின் சீரழிந்த கொள்கைகள், இந்தியா, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் வசிக்கக்கூடிய, உழைப்பாளி மக்களை, தொழிலாளி வர்க்கத்தைக் கொடூரமாகத் தாக்கி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்கள்மீதான இலங்கை அரசினுடைய இராணுவத் தாக்குதல் மேலும் கூடுதலான வன்முறையை இன்றைக்கு நிரூபணமாக்கி வருகிறது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் அதிகபட்ச அதிகாரங்களும், உரிமைகளும் கொண்ட சுயேச்சையான மாநில அரசு அமைந்திடுவதற்கு, தமிழர்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒரு சுமுகமான பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென்ற, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியிருக்கக்கூடிய தமிழக அரசினுடைய தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையில், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே முன்மொழியப்பட்ட

2008 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை இங்கே நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிற இந்த நல்ல சூழ்நிலையில், இலங்கையில் இதுவரை இல்லாத அளவுக்கு தமிழ் மக்கள் தினந்தோறும் செத்து மடிந்துகொண்டு, உயிர் பிழைக்கமாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற வேளையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில், முதலாவது பத்தியில், இந்தத் தீர்மானம் எதற்காகக் கொண்டு வரப்படவேண்டுமென்ற அவசியத்தை சுருக்கமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். அதற்குத் தீர்வு என்ன என்பதையும் இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் பார்ப்பது, இந்தப் பேரவையினுடைய கூட்டத் தொடரின் முதல் நாளிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எனது பெயரால் ஒரு தனி நபர் தீர்மானத்தைக் கொடுத்தோம். அந்தத் தனிநபர் தீர்மானத்தை வலியுறுத்திப் பேச வேண்டுமென்றிருந்த வேளையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நாங்கள் சொன்ன வாசகங்களையெல்லாம், கருத்துகளையெல்லாம் உள்ளடக்கி, இங்கே சட்டமன்றப் பேரவையில் இடம் பெற்றிருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயும், இந்திய அரசு எந்தவகையில் தலையிட வேண்டுமென்ற ஒரு நெறிமுறையோடும் இந்தத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சி சொல்ல விரும்புவது, இந்தத் தீர்மானத்தினுடைய உண்மைத் தன்மை, இதைத் தமிழ்நாட்டு மக்கள் எப்படியெல்லாம் பார்க்கிறார்கள்; அதே வேளையில் தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகள், அதிலும் குறிப்பாக சட்டமன்றப் பேரவையிலே இடம் பெற்றிருக்கிற அரசியல் கட்சிகளெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை பா.ம.க. நேற்று இந்த அவையிலே முன்வைத்திருந்தும், இன்றும் மீண்டும் நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புவது, நல்ல தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு, இங்கே இடம் பெற்றிருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று முதலில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய நேரம் மிக முக்கியமான நேரம். 'காலம் கருதி இடத்தாற் செயின்...' என்று சொல்வார்களே, அந்த அடிப்படையில் ராஜபக்சே

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 12

டெல்லிக்கு வந்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்திலே பேசவிருக்கிறார்கள். என்ன பேச வேண்டுமென்பதற்கு ஆதாரமாக, அழுத்தமாக இந்தத் தீர்மானம் அமைய வேண்டும். தமிழ்நாட்டு மக்களுடைய தீர்மானத்தை, அரசு வலியுறுத்துகிற தீர்மானத்தை, ராஜபக்சே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலை இன்று உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இலங்கையிலே தினம் தினம் செத்து மடிந்துகொண்டிருக்கிறவர்கள், முப்படைத் தாக்குதலிலே இறந்தவர்கள் போக மீதியிருக்கிற குடும்பத்தவர், இன்று இந்தச் சட்டமன்றப் பேரவையிலே என்ன தீர்மானம் வரவிருக்கிறது, நமக்குப் பாதுகாப்பு கிடைக்குமா என்று அவர்கள் எதிர்பார்க்கிற தீர்மானம். அதுமட்டுமல்ல, உயிர் பிழைத்தால் போதும் என்று காடுகளிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள், உணவு இல்லாமல் தொற்று நோய் பரவி, அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இருக்கிற அந்த மக்கள் எதிர்பார்க்கிற தீர்மானம். அதைப்போல பச்சிளம் குழந்தைகள், மாணவர்கள் உயிருக்காகப் பதுங்குக் குழிகளிலே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற தீர்மானம். ஒட்டுமொத்தமாக உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்கள், தமிழ்நாட்டு மக்கள், அரசின் சார்பிலே, அனைத்து அரசியல் கட்சிகள் எப்படிப்பட்ட தீர்மானத்தை வடிக்கிறார்கள் என்று எதிர்பார்க்கிற தீர்மானம், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள், அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புகள் எதிர்பார்க்கிற தீர்மானம் என்ற காரணத்தினாலேதான் இந்தத் தீர்மானம் முக்கியத்துவம் பெற வேண்டுமென்று, அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று மீண்டும் நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

குறிப்பாக, இன்று இலங்கையில் இருக்கிற அவல நிலையை சொல்ல முடியாத சோகக் கதையை எல்லோரும் அறிந்தவர்கள் என்ற காரணத்தினாலே, இதிலே நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்றாலும்கூட அதற்கு ஆதாரமாகச் சிலவற்றை நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது இன்று, நேற்று உருவானது அல்ல. 40 ஆண்டு காலப் பிரச்சினை. இந்த 40 ஆண்டு காலப் பிரச்சினை எதற்காக வந்தது? இலங்கையிலே 1948-லே சுதந்திரம் பெற்ற காலத்திலேயிருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவில்லை. யாராக இருந்தாலும் சரி, இன்று மனிதநேயத்தை வலுப்படுத்த வேண்டும். மனித உரிமையை மீறவே கூடாது. பட்டிதொட்டிகளில் வாழக்கூடிய பாமரன், அப்பாவி

2008 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

முதல் வல்லரசு நாடுகள் வரையிலே சொல்லக்கூடியது மனித உரிமையை எங்கும் மீறக் கூடாது, அது காக்கப்பட வேண்டும் என்ற நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் 40 ஆண்டு காலம், வரலாறு படைத்த தமிழ் மக்கள், இலங்கை நாட்டினுடைய பூர்வீகக் குடிகளாக இருப்பவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டு, இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகிற காரணத்தினாலேதான் அங்கே போராட்டம் கிளம்பியது. ஆனால் ஒன்று, உலகில் பல்வேறு நாடுகள், மொழிக்காக இனத்திற்காக உரிமை வேண்டுமென்று போராடி, இப்படி 40 ஆண்டு காலம் தீர்க்கப்படாமல் இருந்ததாக வரலாறு இல்லை. பல்வேறு நாடுகளிலே போராட்டம் எழுகிறது, வெடிக்கிறது. பிரச்சினைகள் பெரிதானாலுங்கூட சுமூக பேச்சுவார்த்தைமூலமாக முடிந்ததாக வரலாறு இருக்கிறது. ஆனால் இலங்கையில் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகவில்லை. அதை உருவாக்க வேண்டுமென்ற தீர்மானம் இது. இப்படித் தொடர்ந்து கடந்த காலங்களிலே இப்பொழுது ஏற்பட்டதைப்போல, தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே மிகப் பெரிய எதிர்பார்ப்பு, ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது, என்ன கொந்தளிப்பு? அங்கே இருக்கிற பச்சிளங் குழந்தைகள்மீது இராணுவம் கண்மூடித் தனமானத் தாக்குதல் நடத்துகிறது, கொலை செய்கிறது. நம்முடைய பெண்களின் மார்பை அறுத்து கொடுமைப்படுத்துகிறார்கள், கற்பழிக்கிறார்கள். 'தமிழன் மாமிசம் இங்கே விற்கப்படுகிறது' என்று எழுதி தொங்கவிடப்பட்டு விற்பனை செய்த காட்சி, இதையெல்லாம் பார்த்த தமிழ்நாட்டு மக்கள் அன்று கொதித்துப் போனார்கள்.

ஆனால் அதைவிட இன்று என்ன நிலைமை? நம்முடைய குழந்தைகள், மாணவிகள் அங்கே கற்பழிக்கப்படுகிறார்கள். பெண்கள், மாணவியினுடைய பிறப்புறுப்பிலே துப்பாக்கியாலே சுட்டுக் கொல்லப்படக்கூடிய நிலை. பத்திரிகையிலே வந்த செய்தி. அங்கே நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற தகவல். பெண்களைக் கொடுமைப்படுத்துதல். குழந்தைகள்மீது தாக்குதல் என்று நிறைய கொடுமைகள் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் தமிழ்நாட்டு மக்களாக இருக்கிற நாம், தீர்மானத்தை வடிக்கிற வேளையில், கடந்த காலங்களில் இலங்கையில் இதே சூழ்நிலை உருவாகிய நேரத்தில், இன்றைய முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பொறுப்பிலே இருக்கிற கலைஞர் அவர்கள், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று எடுக்கப்பட்ட முயற்சிகள், நடத்திய மாநாடுகள், கோரிக்கைகள், அதற்கு வரலாறு உண்டு. நான் மறுக்கவில்லை.

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 12

அதைப்போல, முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1998-லே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி, அந்த நேரத்திலே இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்கள், சுப்பிரமணியசுவாமி, அமரர் வாழப்பாடி இராமமூர்த்தி போன்றவர்கள் அன்று அந்தக் கூட்டணியிலே இடம் பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இலங்கைப் பிரச்சினையில் அமைதி வேண்டும், போர் நிறுத்தம் வேண்டும் என்று கையெழுத்திட்டு, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தும்கூட நிறைவேற்றப்படாத வரலாறு.

அதுமட்டுமல்ல, முன்னாள் முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலங்கையிலே தீர்வு வேண்டுமென்று சொல்லி, அவர் எடுத்துக்கொண்ட முயற்சி அலாதியானது. தமிழ்நாட்டினுடைய அரசு கஜானாவிலிருந்து உதவிய நிலை. அவர் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது.

அதைப்போலவே அன்னை இந்திரா காந்தி அவர்கள் அண்டை நாடு என்று பார்க்கவில்லை. அங்கே வாழக்கூடிய தமிழன், இந்திய நாட்டுத் தமிழனுடைய உறவுமுறை இருக்கிறது, வரலாற்றுரீதியாக உறவு இருக்கிறது, ஆகவே, காக்கப்பட வேண்டுமென்று அன்னை இந்திரா அவர்கள் போராட்டக் குழுக்களுக்குச் செய்த நிதி உதவி, பயிற்சி உதவி, பல்வேறு உதவிகள் ஆகியவற்றை நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

முற்பகல் 11-45

திரு. ராஜிவ் காந்தி மறைவால் இந்திய நாடு வாடிக் கொண்டிருக்கிறது. இளம் தலைவர் அமரர் ராஜிவ் காந்தி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி. அந்த முயற்சிக்கிடையிலே அவர் பலியான விதம் பரிதாபத்திற்குரியது, வேதனைப்படுகிறோம். இப்படி இந்தப் பிரச்சினையிலே நீண்ட வரலாறு இருக்கிறது.

அதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான், இன்று அவையிலே இருக்கிற நாம் இந்தத் தீர்மானத்திற்கு எந்த வகையிலே வடிவம் கொடுக்க வேண்டும், எப்படி நல்ல சமூக நிலையை உருவாக்க வேண்டுமென்ற காலகட்டத்திலே இருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

2008 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

இப்படி இந்திய நாட்டுத் தலைவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்கள், அரசியல் கட்சிகள் எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொள்கிறோம். ஆனால், நிரந்தரத் தீர்வு ஏற்பட்டதா, இல்லை. இந்திய நாடும், இலங்கை நாடும் எத்தனைமுறை ஒப்பந்தம் போட்டன? ராஜிவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தம், சாஸ்திரி-பண்டாரநாயகா ஒப்பந்தம்; போடப்பட்ட ஒப்பந்தங்கள் மீறப்பட்டன, காப்பாற்றப்படவில்லை என்று ஆன காரணத்தினாலேதான், இன்று போடக்கூடிய தீர்மானம் என்பது வலு சேர்ப்பதாக அமைய வேண்டும். மற்ற முயற்சிகளைப்போல, இதுவரையிலே இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானங்கள் அங்கே வடிவம் பெறாததைப்போல, இந்திய நாட்டினுடைய கோரிக்கையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாத நிலை இருந்ததைப்போல, இந்த முறை இருந்துவிடக்கூடாது என்பதை நான் இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் புரட்சிக் கவிஞர் கூறியதைப்போல 'இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டோம்' என்ற நிலை உருவாக வேண்டும் என்பது எங்களுடைய பணிவான வேண்டுகோள்.

ஆகவே, ஒட்டுமொத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புவது, அங்கே நடப்பது உரிமைப் போராட்டம். சிங்கள அரசு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. அந்த நாட்டினுடைய சட்டத்தில் அவர்கள் திருத்தம் கொண்டு வந்தது என்னவென்று சொன்னால், பௌத்த மதத்தைத் தழுவியவர்தான் அந்த நாட்டினுடைய அதிபராக வரமுடியும் என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து அதன் அடிப்படையில் ஒன்றாக நிற்கிறார்கள். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே பௌத்த மதம், இந்து மதம், இஸ்லாம் மதம், கிறித்துவ மதம் என்று பல்வேறு மதங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்கள் சொல்வது பௌத்த மதத்தைச் சார்ந்தவர்தான் அதிபராக வரமுடியும். இது எவ்வளவு பெரிய ஜனநாயகப் படுகொலை? எப்படி மற்றவர்களை மதிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, இப்படி பௌத்த மதத்தைத் தழுவியவர்கள் என்று சொல்வது மட்டுமல்ல அதையொட்டி இலங்கை இராணுவத்தினுடைய தளபதி Fonseka ஓர் அறிவிப்பை வெளியிட்டார். என்ன சொன்னார், இது பௌத்த நாடு, இது சிங்கள நாடுதான், இங்கே வாழக்கூடிய தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 12

அப்படி விரும்பவில்லையென்று சொன்னால், நீங்கள் வெளியேறலாம், இங்கே வாழ முடியாது என்று வெளிப்படையாக அறிவித்தார். அந்த அறிவிப்புக்கு அதிபர் ராஜபக்சேயோ, அரசுத் தரப்பிலோ, அந்த அரசாங்கமோ மறுப்புத் தெரிவிக்கவில்லை. அப்படியென்றால் என்ன பொருள்? தமிழர்களுக்கு உரிமை இல்லை. தமிழர்கள் அங்கே குடியேறியவர்களா? தமிழர்கள் அந்த நாட்டினுடைய பூர்வீகக் குடிமக்கள். உரிமை கேட்பதிலே என்ன தவறு இருக்க முடியும் என்ற காரணத்தினாலேயேதான் அதை இங்கே மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினையை இன்று இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர் பிரச்சினையாக நாம் பார்க்கக்கூடாது. ஒட்டுமொத்த தமிழினத்தினுடைய மானப் பிரச்சினை. தமிழனுக்கு உரிமை மறுக்கப்படுகிறது என்று சொன்னால், உலகம் எங்கும் வாழக்கூடிய தமிழினத்தினுடைய மானப் பிரச்சினையாகக் கருத வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். பல உதாரணங்களைச் சொல்லலாம். வங்காள தேசத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். வங்காள தேசப் பிரிவினைக்கு என்ன நடந்தது? அன்னை இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள், ஏற்றுக்கொள்ளவில்லை. முதலில் போர் நிறுத்தம் என்று சொல்லப்பட்டது. 1972 ஆம் ஆண்டு சிம்லாவிலே பேச்சுவார்த்தை. முதலில் போர் நிறுத்தம், 1972-லே சிம்லாவில் பேச்சுவார்த்தை, நிரந்தரத் தீர்வு கிடைத்தது. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் இப்பொழுது நாம் அணுக வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, ஒட்டுமொத்தமாக சொல்லப்போனால், முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற தீர்மானம் நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது, மறுக்கவில்லை.

*முற்பகல் 11-50*

அந்தத் தீர்மானத்தோடு, வாய்ப்பு இருக்குமானால், நாங்கள் சொல்வது தேவைப்படுமானால், அதையும் ஆராய்ந்தறிந்து சேர்த்துக்கொள்ளலாம் என்றவொரு வேண்டுகோளையும் நான் இந்த அவையில் முன்வைக்க விரும்புகிறேன். அது என்னவென்று சொன்னால், ஒரு நல்ல தீர்வு வேண்டும். ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அங்கே உடனடியாகப் போர் நிறுத்தம் வேண்டும், நிபந்தனையற்ற போர் நிறுத்தம் வேண்டும். நம்முடைய வேண்டுகோளை, இந்திய நாட்டினுடைய வேண்டுகோளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னால், இந்திய அரசு எந்த உதவியையும் இலங்கைக்கு செய்யக்கூடாது என்ற ஒரு

2008 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

வேண்டுகோளைத் தீர்மானத்தின் வடிவிலோ அல்லது முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலோ இந்தியப் பேரரசுக்கு முன்வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே முன்வைக்க விரும்புகிறோம்.

அதுமட்டுமல்ல, சில உதாரணங்கள் இருக்கின்றன. கனடாவிலே உள்ள கியூபக் என்ற மாநிலத்தில் பிரச்சினை வந்தது. வாக்கெடுப்பு, என்று பல உதாரணங்கள் இருக்கின்றன இந்த இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு. இன்னொன்று இந்தத் தீர்மானத்தை நம்முடைய இந்தியப் பேரரசு வலியுறுத்துகிறது. இந்தத் தீர்மானத்தை ராஜபக்சே அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம். போர் நிறுத்தம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி இல்லாதபட்சத்தில் நான் சொல்லக்கூடிய ஒரு தீர்மானத்தைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பதை அவைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு இது ஐ.நா. சபை தலையிட வேண்டிய தீர்மானம். 2000 ஆம் ஆண்டில் கனடாவும், பல்வேறு நாடுகளும் ஐ.நா.-விற்கு ஒரு கோரிக்கை வைத்து, 2000 ஆம் ஆண்டில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய பெயர் என்னவென்று சொன்னால், International Commission on intervention and State Sovereignity என்ற கமிஷனை ஐ.நா. அவை உருவாக்கியது. ஐ.நா.-விற்கு கனடாவும், பல்வேறு நாடுகளும் வைத்த கோரிக்கையினாலே உருவாக்கப்பட்டது. அந்த கமிஷனுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், ஒரு நாட்டில் பல இனத்தவர்கள் வாழுகிறார்கள், பல மொழி பேசக்கூடியவர்கள் வாழுகிறார்கள், பல மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழுகிறார்கள். இப்படிப் பல்வேறு மொழி, மதம் இனம் என்று வாழக்கூடிய ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்படிப் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமையும், பொறுப்பும் அந்த நாட்டினுடைய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அது அந்த நாட்டினுடைய கடமையாகும். ஆகவே, அதனை அந்த நாடு பாதுகாக்கத் தவறினால், கடமையிலிருந்து தவறுமானால், உள்நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டு, ஒரு இனத்தவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அண்டை நாட்டில் அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்துவார்களேயானால், அது பக்கத்து நாட்டின் முறையீட்டின் பேரில் ஐ.நா. கமிஷன் அதாவது இந்த International Commission on intervention and State Sovereignty என்ற அந்த கமிட்டி தலையிடலாம் என்று ஐ.நா.-வால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த கமிஷனுடைய

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 12

அடிப்படையிலே இந்தியா இலங்கையை வலியுறுத்துவதற்கு. வற்புறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்துகிறது. அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னால், இந்திய நாடு ஐ.நா.-விற்குச் சென்று, ஐ.நா.-வின் மூலமாக இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கு எல்லா முகாந்திரமும் இருக்கிறது என்பதற்கு இது சான்று என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, இந்தியா நேரிடையாகத் தலையிட முடியாது, அது அண்டை நாடு, வேறு நாடு என்று இந்தியப் பேரரசு கருதுமானால், அதன் அடிப்படையிலே தலையிடுவதற்கு, வலியுறுத்துவதற்கு அங்கே ஒரு நல்ல தீர்வினை உண்டாக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற இந்தக் கருத்தையும் நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள், அவர்கள் இந்திய நாட்டு மீனவர்கள். இந்தப் பிரச்சினையும் ஒரு தொடர்கதையாக இருப்பதற்குக் காரணம் இலங்கை-தமிழர் பிரச்சினையே. இலங்கை-தமிழர் பிரச்சினைதான் மீனவர் பிரச்சினைக்கும் காரணமாக இருக்கிறது. அதனையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, ஒட்டுமொத்தமாக இப்பொழுது நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இலங்கை அரசு இராணுவத்தை அதிகப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். இந்தியா மிகப் பெரிய நாடாகு, வல்லரசு நாடாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய நாட்டின் இராணுவத்தினருடைய எண்ணிக்கை 10 இலட்சம் பேர்தான். ஆனால், இலங்கை நாட்டு இராணுவத்திலே இரண்டரை இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

ஒரு சின்ன நாடு, ஒரு குட்டி நாடு எதற்கு அவ்வளவு இராணுவத்தை பலப்படுத்த வேண்டும். தமிழர்களை அழிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே. அது யாரை அழிப்பதற்கு. அந்த நாட்டு குடிமக்களை அழிப்பதற்காகவா? ஆகவே ஒரு நாட்டிலே வாழக்கூடிய தன் நாட்டு மக்களையே அழிக்கக்கூடிய அவல நிலை, மனித உரிமை மீறல், உலகத்தில் எங்கும் இல்லாத அளவிற்கு, நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நம்முடைய தமிழக சட்ட மன்றப் பேரவை நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி, இந்தத் தீர்மானம் என்பது கடந்த

2008 நவம்பர் 12] [திரு. ஜி.கே. மணி]

காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் போல, இந்தத் தீர்மானத்திற்கும், செயல்வடிவம் இல்லாமல் இருந்துவிடக் கூடாது. இந்தத் தீர்மானம் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாக இருந்து, இந்திய அரசு உடனடியாக தலையிட்டு, போர் நிறுத்தம் செய்வதற்கும், உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து, தமிழக மக்களுக்கு அனைத்து உரிமைகளும், சமத்துவமும் கிடைத்து வாழ்வதற்கு வழி செய்யக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேறுவதற்கு, இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்ற நம்முடைய பிரதானக் கட்சியான ஆளும் தி.மு.க., எதிர்க் கட்சியான அ.தி.மு.க., அகில இந்திய காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி, இந்திய பொதுவுடைமைக் கட்சி, ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று உங்களை பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினை நான் சொல்லி, இந்த மன்றத்திலே சில கருத்துகளைப் பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினையின்பால் அக்கறை கொண்டுள்ள, ஆர்வம் கொண்டுள்ள இந்த அவைக்கு வெளியே இருக்கின்ற பல்வேறு தரப்பினருக்கும், சில நியாயமான கேள்விகளைத் தங்கள்மூலமாக கேட்க விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, இலங்கையில் அமைதி வேண்டும், போர் நிறுத்தம் வேண்டும், அங்கே வாழுகின்ற தமிழ்ச் சகோதரர்கள் அமைதியிலும், சமாதானத்திலும் வாழ வேண்டுமென்பதிலே மாற்றுக் கருத்துக் கொண்ட கட்சியல்ல. சில அரசியல் கட்சிகளுக்கு வேண்டுமானால், இது ஒரு அரசியல் கோஷமாக இருக்கலாம். அவர்கள் திறந்திருக்கின்ற அரசியல் கடைகளில் சரக்கு தீர்ந்து போகின்ற வேளையிலே இலங்கை தமிழர் என்ற பிரச்சனையைக் கிளப்பி அவர்கள் தொடர்ந்து அரசியல் நடத்த நினைக்கலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், காங்கிரஸ்

பொறுத்தவரை (குறுக்கீடுகள்) நான் சில அரசியல் கட்சிகளைத்தான் சொன்னேன். உங்களையா சொன்னேன்? (குறுக்கீடுகள்) நான் உங்கள் யாரையும் சொல்லவில்லையே! யாரையும் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) நான் யாரையுமே சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையோ அல்லது நண்பர் சிவபுண்ணியத்தையோ சொல்லவில்லை.

இந்தப் பிரச்சினையை எந்த அரசியல் கட்சிகள் வெற்று கோஷங்களாக, வியாபாரப் பொருளாக நினைக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் நான் சொன்னேனேயொழிய, நான் இந்த அவையிலே இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்துச் சொல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்களைப் பொறுத்தவரை (குறுக்கீடுகள்) எங்களைப் பொறுத்தவரை (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்தவுடன் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) I am not yielding. (குறுக்கீடுகள்) I am not yielding. (குறுக்கீடுகள்) I am not yielding. அதாவது பொதுவான விஷயத்தைத்தான் நான் சொல்கிறேன். பொதுவாகத்தான் நான் சொல்கிறேன். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவர் யாரையும் குறிப்பிட்டுக் குற்றச்சாட்டு சொல்லவில்லை. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடக்கின்ற இலங்கைத் தமிழரின் இன்றைய பிரச்சினைகள், இது குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளுக்குப் பல்வேறு காலகட்டங்களிலே பல்வேறு கருத்துகள் இருந்திருக்கின்றன. காங்கிரஸ் கட்சிக்குக்கூட இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை சில காலங்களிலே இருந்த கருத்துகள் பிற்காலத்திலே மாறுபட்டிருக்கின்றன. இந்த அவையிலேயிருந்த ஒவ்வொரு கட்சிக்கும், இந்த அவைக்கு வெளியே இருக்கின்ற சில கட்சிகளுக்குக்கூட அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் கொண்டிருந்த கருத்தை இந்தப் பிரச்சினையிலே கொண்டிருக்கவில்லை. (குறுக்கீடு)

*நண்பகல் 12-00*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அவருடைய கருத்தைப் பேசுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் முதலிலே பேசுகிறபோதே குறிப்பிட்டுச் சொன்னேன். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கின்றது.

2008 நவம்பர் 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

மாறுபட்ட கருத்துகளும் இருக்கின்றன. ஆகவே, எந்தக் கருத்தையும் இங்கே சொல்லக் கூடாது என்பதல்ல. ஆகவே, மாறுபட்ட கருத்துகளை அவரவர்கள் கோணத்திலேதான் அவர்கள் சொல்ல முடியும். அப்படிச் சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அரசியல் காரணமாக அதற்கு ஒரு சாயம் பூசுவதற்கான முயற்சி எடுத்து, சரக்குகள் எல்லாம் தீர்ந்துபோய்விட்ட காரணத்தினாலே இந்தச் சரக்கை எடுத்து காரியம் செய்வதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்று சொன்னால், நான் சொல்கிறேன், காங்கிரஸ் கட்சிக்கு வேறு வகையிலே நிர்ப்பந்தம் கொடுக்க முடியாமல் இங்கே இருக்கிற மாநில அரசைக்கூட இதன் காரணமாக நீங்கள் நிர்ப்பந்தப்படுத்துகிறீர்களோ என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக குற்றம் சுமத்துகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜனநாயக நாட்டிலே ஒரு பிரச்சினை குறித்து மாறுபட்ட கருத்துகள் இருப்பது இயற்கை. மாறுபட்ட கருத்துகளை ஏற்றுக்கொள்வதும், மாறுபட்ட கருத்துகளில் முரண்பட்டு நிற்பதும், முரண்பட்டு நிற்கின்றபோது தங்கள் கருத்துகளில் இருக்கின்ற நியாயங்களை எடுத்துச் சொல்வதும் ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள அரசியல் உரிமை. அதைப்போன்ற கட்சிகளை இந்தத் தளத்திலே நான் குற்றம்சாட்டவில்லை. ஆனால் இல்லாத ஒரு குற்றச்சாட்டைத் தேடி எடுத்து, அதற்கு வர்ணம் பூசி, அதைப் புனைந்து, இதை ஏதோ காங்கிரஸ் கட்சி வாழ்க்கையிலே செய்யக் கூடாத ஒரு தவறைச் செய்துவிட்டது போலவும், மத்திய அரசும், மாநில அரசும் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு விரோதமாக மிகப் பெரிய பாவத்தை இழைத்துவிட்டது போலவும், இன்று இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் இறந்து கொண்டிருப்பதற்கு மிகப் பெரிய காரணம் மத்திய அரசு என்பதைப் போலவும், இந்த அவைக்கு வெளியே பல தலைவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேண்டுமென்றால், அந்தப் பத்திரிகைக் குறிப்புகளை வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டால் அவற்றை நான் தரத் தயாராக இருக்கிறேன். இலங்கையிலே தமிழர்கள் சாவதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று சொன்ன அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் இந்த அவையிலே இல்லையா? தமிழகம் தாண்டி இலங்கையிலே நடக்கின்ற கொடுமைக்கு முதலமைச்சர் துணை போகிறார் என்று குற்றம்சாட்டிய கட்சிகள் இங்கே இல்லையா?

அந்தக் கட்சிகளுக்கு பதில் சொல்ல வேண்டிய தளம் இந்தத் தளம்தானே? அதைத்தான் நாங்கள் சொல்வதற்காக வந்திருக்கிறோமேயொழிய, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே குளிர் காயவோ அல்லது அதை அரசியல் ஆதாயப்படுத்திக்கொள்ளவோ, அதை தேர்தல் நேரத்திலே பிரச்சாரமாகச் சொல்வதற்காகவோ நாங்கள் இந்த அவைக்கு வரவில்லை. ஏனென்று சொன்னால், நாங்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றபோதெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு போகிறோம். இங்கேகூட என் அருமை நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒவ்வொரு நேரமும் உணர்ச்சிவசப்பட்டு எழுந்திருக்கின்றபோது, சில பேரால் அதைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், எங்களால் புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால், அந்தச் சம்பவங்கள் எங்கள் வாழ்க்கையிலே நேர்ந்தவை. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக இந்த நாட்டினுடைய மிகப் பெரிய உயிரை இந்த மண்ணிலே தியாகம் செய்து கொடுத்த நாங்கள்தான் அதை உணர்வுபூர்வமாகப் புரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு சம்பவத்தை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், இது தகுந்த நேரம் என்று எண்ணுகிறேன். எங்களுடைய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் ஒரு சம்பவத்தைச் சொன்னார்கள். விடுதலைப் புலிகளுடைய தலைவர் பிரபாகரன் அவர்களை இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு விடை கொடுப்பதற்காக தலைவர் ராஜிவ் காந்தியைப் பார்க்க அழைத்துச் சென்றபோது, தலைவர் ராஜிவ் காந்தி என்ன செய்தார் தெரியுமா? தன் அறைக்குள்ளே அழைத்துப் போய், அவரைக் கட்டித் தழுவி, தைக்கப்பட்ட bullet-proof shirt - அவருக்காகத் தைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த அந்த bullet-proof சட்டையைக் கழற்றி பிரபாகரன் கையிலே கொடுத்து வாழ்த்துச் சொல்லி, உங்கள் உரிமைப் போராட்டத்திலே வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்தி அனுப்பிய ராஜிவ் காந்தியை இந்த மண்ணிலே இழந்தவர்கள் நாங்கள். எங்கள் அன்பிற்குரிய அன்னை சோனியா காந்தி அவர்கள் அந்த மரணம் நடந்து முடிந்த பிறகு, தன்னுடைய விதவைக் கோலத்திலே இந்த நாட்டிலே நின்று, விமான நிலையத்திலே சொன்ன ஒரே வார்த்தை- என்ன வார்த்தை சொன்னார் தெரியுமா? எங்கள் தமிழ் மக்களுக்கு நன்றி என்று சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார் - 3 தலைமுறை. 15 நாட்களுக்கு முன்னால் எங்கள் குலக்கொழுந்து, ராகுல் காந்தி அவர்கள் காஷ்மீரத்து மண்ணிலிருந்து. "என் தந்தையின் மரணத்திற்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை" என்று பேசுகிறார்கள். எங்கள்

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அன்பிற்குரிய எங்கள் ஆருயிர் சகோதரி பிரியங்கா, "தன் தந்தையைக் கொன்றவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லி, என் தந்தையின் மரணத்திற்குக் காரணம் தேடி வந்திருக்கிறேன்" என்று சொல்கிறார். அந்த வம்ச மரபில் நாங்கள் வந்தவர்கள். எனவே, இதனை நினைக்கின்றபோதெல்லாம் நாங்கள் பதறிப் போகிறோம். இந்தச் சம்பவத்தை நினைக்கின்றபோதெல்லாம் துடித்துப் போகிறோம். இருந்தாலும்கூட எங்களுக்கு அளவுக்குமீறிய கரிசனம் இருக்கிறது.

பிற்பகல் 12-05

ஒரு துன்பியல் மரணம் என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், எங்களைப் பொறுத்தவரை எங்கள் வாழ்க்கையை இழக்க வைத்த மிகப் பெரிய இழப்பு என்பதைக்கூட நாங்கள் மனதார அதைத் தள்ளி வைத்துவிட்டு, அவர்களையும்கூட மன்னிக்கத் தயாராக இருக்கிறோம் என்கிற மரபுதான் எங்கள் அன்னை சோனியா காந்தியினுடைய மரபு. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது, அதிக உரிமை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்று மத்திய அரசு, மத்திய அரசு என்று சொன்னவுடனே, காங்கிரஸ் அரசு என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். இந்த அவையிலே இருக்கின்ற பிரதான கட்சிகள், திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அமைச்சரவையிலே இருக்கிறது. இங்கே இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சி அங்கே இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, இன்று மத்திய அரசினுடைய ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நாங்கள் பொறுப்பு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை நியாயப்படுத்துகிறோம். ஆனால், ஒன்று; இங்கேகூட நம்முடைய அருமைக்குரிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அவைத் தலைவர் அண்ணன் கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது அற்புதமாகச் சொன்னார்கள்; இந்திரா காந்தி அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய அன்பிற்குரிய தோழர் ரவிக்குமார் அவர்கள் பேசுகின்றபோது, ஜெயவர்த்தனேவுக்கும் அமரர் ராஜிவ் காந்திக்கும் நடந்த ஒப்பந்தத்தைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய அருமைக்குரிய முதலமைச்சர் அவர்கள், அவர்கள் எழுதி தயாரித்துள்ள இந்தத் தீர்மானத்திலே 40 ஆண்டுக் கால வரலாற்றைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த 40 ஆண்டுக் காலத்திலே நடந்த ஒவ்வொரு சம்பவமும், ஒவ்வொரு முன்னேற்றமும் காங்கிரஸ் கட்சி இல்லாமலோ, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் இல்லாமலோ

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 12

நடந்துவிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அது, சிரிமாவோ பண்டார நாயகா காலத்தில் இருந்தாலும் சரி, அன்னை இந்திரா காந்தியினுடைய காலத்தில் இருந்தாலும் சரி, அமரர் ராஜிவ் காந்தியினுடைய காலமாக இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு, பிரதமர் நரசிம்மராவ் இருந்த காலமாக இருந்தாலும் சரி, இப்போது இருக்கின்ற பிரதமர் மன்மோகன் சிங் காலமாக இருந்தாலும் சரி, தமிழர்களுடைய நலனைத் தள்ளி வைத்துவிட்டு, அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்று நினைக்கின்ற இயக்கம் காங்கிரஸ் பேரியக்கம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு பதவியும், அரசும் எங்களுக்குத் தேவை இல்லை. ஏனென்று சொன்னால், இன்று இனப் படுகொலை, இனப் படுகொலை என்று ஒரு வார்த்தை சொல்கிறார்களே, இலங்கையிலே நடப்பதை, அந்த இனப் படுகொலை என்கிற வார்த்தையை முதன்முதலில் கண்டுபிடித்துச் சொன்னவர் அன்னை இந்திரா காந்தி அவர்கள்தான். பாராளுமன்றத்திலே அவர்கள் நின்று, இலங்கையில் நடப்பது இனப் படுகொலை என்று சொன்ன அந்த வார்த்தைதான், உலகத்தினுடைய நாடுகளுடைய கவனத்தை ஈர்த்து இலங்கையைத் திரும்பிப்பார்க்க வைத்தது. அதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களின் துயரம், இந்தியர்களுடைய துயரம் என்று 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி அன்னை இந்திரா காந்தி அறிவித்தார். It is not the sorrow of the Tamils, it is the sorrow of the Indians. ஆகவே, நாங்கள் இதைத் தமிழர்களுடைய பிரச்சினையாக மட்டும் காங்கிரஸ் கட்சி பார்க்கவில்லை. ஒட்டுமொத்த இந்தியாவினுடைய பிரச்சினையாகப் பார்க்கின்றபோதுதான். இந்தப் பிரச்சினையினுடைய பலம் நமக்குத் தெரிகிறது என்பதை நம்முடைய அருமை நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேநேரத்திலே, செப்டம்பர் 16 ஆம் தேதி, திருச்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற அன்னை இந்திரா காந்தி அவர்கள், இலங்கையில் மனித உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்கிற குற்றச்சாட்டை இரண்டாவதாக வைத்தார்கள். இதை எதற்காக நான் இந்த அவையிலே சொல்கிறேன் என்று சொன்னால், காங்கிரஸ் கட்சியினுடைய நீண்ட பங்களிப்பு, 1984 ஆம் ஆண்டு, பதவியேற்ற ஒரு மாதத்தில், அதாவது நவம்பர் 29 ஆம் தேதி இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுங்கள் என்று கடிதம் எழுதியதோடு, அங்கு தமிழர்கள் தாக்கப்படுவதைச் சகித்துக்கொள்ள முடியாது, பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்று டிசம்பர் 12 ஆம் தேதி ஓர் எச்சரிக்கையும் விடுத்தவர் ராஜிவ் காந்தி.

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அதைப்போல, இதுதொடர்பாக 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் உலகளாவிய கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையிலே, இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சருடன் டெல்லியிலே பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக, இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமரோடு, இந்தியப் பிரதமராக இருந்த ராஜிவ் காந்தி பேச்சுவார்த்தை நடத்தியதோடு மட்டுமல்லாமல், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அந்நாடு இந்தியாவின் ஆலோசனைப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று 1985, ஜூன் 7 ஆம் தேதி அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் எச்சரிக்கை விடும் அளவுக்கு உலகக் கவனத்தை ஈர்த்தவர் ராஜிவ் காந்தி.

இங்கு சொல்கிறார்களே, வரிசையாக வாசித்தார்கள், பின்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, போன்ற நாடுகளுடைய தலைவர்கள் எல்லாம், இலங்கையிலே இருக்கக்கூடிய மனித உரிமைகளைப் பற்றிப் பேசக்கூடிய அளவுக்கு, மக்களுடைய கவனத்தையும். அகில உலக நாடுகளின் கவனத்தையும் கவர்ந்தது யார் என்று சொன்னால், தலைவர் ராஜிவ் காந்தி, அன்னை இந்திரா காந்தி, காங்கிரஸ் பிரதமர்கள், காங்கிரஸ். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், இன்று எங்களைப் பார்த்து தொடர்ந்து குற்றச்சாட்டு; தமிழர்களுக்கு அன்னியமான கட்சி காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமாக அவர்கள் துரோகம் செய்கிறார்கள், வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு தொடர்ந்து வருகிற காரணத்தினால்தான் நான் இன்று சொல்கிறேன். இன்று எங்களுக்கு இருக்கின்ற எண்ணம், இந்த அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதுதான். ஆகவேதான், பல பிரச்சினைகளை, பல துன்பியல் சம்பவங்களை, எங்களுக்கு நேர்ந்த மிகப் பெரிய வரலாற்றுத் துன்பங்களையெல்லாம் நாங்கள் மறந்துவிட்டு, தமிழர்கள் நலன் காக்க வேண்டும், தமிழர் மண்ணில் அமைதி நிலவ வேண்டும், இந்த ஆட்சியும் அதிகாரமும் நம் கையிலே இருக்கிறது. இன்று தமிழகத்தை வழிநடத்தக்கூடிய, மிகப் பெரிய வரலாற்றுப் புகழ்மிக்க முதலமைச்சர் அவர்கள் வாழ்கின்ற காலத்திலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையென்று சொன்னால், ஒருநாளும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வராது என்கின்ற நோக்கத்தோடுதான் இன்று முதலமைச்சரை நாங்கள் நம்புகின்றோம் என்று சொன்னோம். முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளை நம்புங்கள் என்று சொன்னோம்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 12 பிற்பகல் 12-10

ஒரு திருமண வீட்டிலே பேசுகின்றபோது எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் சொன்னார். அந்த மேடையிலே பல்வேறு நண்பர்கள் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசி ஆளுக்கொரு கோரிக்கையை வைத்தார்கள். அப்போது பேச வந்த சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் முத்தாய்ப்பாகச் சொன்னார். இதைப் பற்றி நீங்கள் ஒருவரும் பேசாமல் இருப்பதே நலம், ஒன்று மட்டும் செய்யுங்கள், தமிழக முதலமைச்சரை நம்புங்கள் என்று சொன்னார். இந்தப் பிரச்சினையை அரசியலாக்காமல், ஆளுக்கொரு பக்கம் திசை திருப்பாமல், இதை கோஷமாக வைத்துக்கொண்டு, தங்கள் விஷ விதைகளைத் தமிழகத்தில் விதைக்காமல், இலங்கைத் தமிழர்களுடைய நலத்தை மட்டுமே நாடுகின்ற அரசியல் கட்சியாக நாம் இருப்போம் என்று சொன்னால், இந்தப் பிரச்சினை திசை திரும்பாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர்களுடைய அமைதி, இலங்கைத் தமிழர்களுடைய வாழ்க்கை, இலங்கையிலே தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய சமாதானம் என்பது பற்றி மட்டுமே நாம் நிறுத்திக்கொள்ள வேண்டுமேயொழிய, அதற்கு அடுத்த கட்டமாக, இந்தப் பிரச்சினையை சிலர் திசை திருப்புகின்றபோதுதான் எச்சரிக்கை மணி கொடுக்க வேண்டிய அவசியத்திற்கு காங்கிரஸ் தள்ளப்பட்டது. இன்று அகண்ட தமிழகம் வேண்டும். தனித் தமிழ்நாடு வேண்டும். உலகத்திலே வாழ்கின்ற ஒரே தமிழன் பிரபாகரன் என்கின்ற கோஷங்களை, திருவிழாக் கூட்டத்திலே வந்து ஜேப்படி செய்கின்ற திருடர்களைப்போல, நாட்டு மக்கள் தமிழர்களுக்காகக் கவலைப்படுகின்றபோது, தங்கள் பிரிவினைவாதத்தை விற்க வருகின்றபோதுதான் காங்கிரஸ் கட்சி எச்சரிக்கை மணி அடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றோம்.

நான் சில பத்திரிகைகளிலே வந்த சம்பவங்களைப் படிக்கின்றபோது உள்ளபடியே நெகிழ்ந்து போனேன். இலங்கையிலிருந்து ஒரு சகோதரி இங்கே அகதிகள் முகாமிலே இருக்கின்ற தன்னுடைய அத்தைக்குக் கடிதம் எழுதுகின்றாள். அந்தக் கடிதத்தின் வாசகங்களை பத்திரிகையிலே பிரசுரித்திருக்கின்றார்கள். அந்த வாசகத்தை நான் இந்த அவையிலே பதிவு செய்யலாம் என்று எண்ணுகின்றேன். இலங்கையிலிருந்து ஒரு சகோதரி அகதிகள் முகாமில் வாழும் தன் அத்தைக்கு எழுதிய கடிதம் இது. "நீங்கள் இலங்கைக்கே திரும்பி வந்துவிட வேண்டுமென்று முயற்சி செய்வதாக நான் கேள்விப்பட்டேன்.

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

தயவுசெய்து வந்துவிடாதீர்கள். அங்கேயே இருங்கள். நீங்கள் நிச்சயம் உயிரோடு இருப்பீர்கள் என்ற நம்பிக்கையாவது எங்களுக்கு இருக்கும். இங்கே நிலைமை படுமோசம். நான் காட்டில் இருக்கின்றேன். மாதவிலக்கு வந்தபோது மாற்றிக்கொள்ள துணிகூட கிடைக்கவில்லை." ஒரு தமிழ் சகோதரி இலங்கையிலே விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் நடுவிலே அகப்பட்டு, வாழ்வதற்கு வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற ஒரு தமிழ் சகோதரி, அகதியாக இந்த நாட்டுக்கு வந்திருக்கின்ற தன் அத்தைக்கு அங்கிருந்து வந்த இன்னொரு தமிழ் சகோதரி மூலம் கொடுத்தனுப்பிய கடிதம் இந்தக் கடிதம். இந்தக் கொடுமைக்கு யார் காரணம்? இந்தப் பரிதாபத்திற்கு யார் காரணம்? இதில் மாற்றுக் கருத்துகள் எத்தனை இருக்கின்றன? டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்துகளையெல்லாம் இந்த அவையில் பதிவு செய்ய வேண்டுமா? இலங்கையிலே இருக்கின்ற தமிழ் அமைப்புகள் நமக்குச் சொல்லிவிடுகின்ற தகவல்களையெல்லாம் இங்கே பதிவு செய்ய வேண்டுமா? எவ்வளவு பெரிய வரலாற்றுக் கொடுமைக்கு ஆளான இந்த இயக்கம், இன்று எதனால் இந்தப் பழியை சுமந்திருக்கின்றது? நான் கேட்கின்றேன், மத்திய அரசு பேச வேண்டுமென்று சொல்கின்றீர்கள், பேசலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கு இருக்கின்ற அரசியல் செல்வாக்கை, தனக்கு மத்தியிலே இருக்கின்ற மரியாதையை, தனக்கு அன்னை சோனியா காந்தி அவர்களிடம் இருக்கின்ற நெருக்கத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டுமென்று சொல்கின்றீர்கள், தீர்க்கலாம். யாரிடம் பேசுவது? எதை முன்னிறுத்திப் பேசுவது? இன்று ராஜபக்சேவை வேண்டுமானால் நாம் அழைக்கலாம். மத்திய அரசை விட்டு அவரிடம் பேசச் சொல்லலாம். மன்மோகன்சிங் பேசுவார். ஆனால், மாற்றுத் தரப்புக்கு யார் பொறுப்பேற்றுக்கொள்வது? Who is the pointsman for the other side? இந்த அவையிலே பேசுகின்ற கட்சிகள், அதைப்போன்ற ஒரு அமைதித் தீர்வுக்கு உத்தரவாதம் தருகின்றோம். அவர்களுக்காக நாங்கள் இருக்கின்றோம் என்று யாராவது கை தூக்குவார்களா? நாங்கள் சொல்கின்றோம். முதலமைச்சர் பேசுவார். டாக்டர் மன்மோகன்சிங் பேசுவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணப்பன், சொல்லுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.

இதற்கு யார் பொறுப்பேற்றுக்கொள்கின்றார்கள் என்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வேறுசில அரசியல் கட்சியினுடைய தலைவர்களும், இருதரப்பும் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, முதன்முதலாக விடுதலைப் புலிகள் தரப்பிலே அவர்கள் போர் நிறுத்தத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்கள். ஆனால், இலங்கை அரசுதான் முற்றிலும் மறுத்துவிட்டது. அதைப்போல, எதிர்காலத்திலே சமரசம் ஏற்படுவதற்கு எந்த முயற்சிகள் மேற்கொண்டாலும் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அந்த இயக்கத்தினுடைய செய்தித் தொடர்பாளர் நடேசன் அவர்கள் நேற்றையதினம்கூட பத்திரிகையிலே பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, இந்த அவையிலே என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றபோது நான் வைத்தேன். இந்த அவையின்மூலமாக சில கேள்விகளை இந்தப் பிரச்சினையை நோக்கி தங்கள் கவனத்தை திருப்புகின்ற, உலகம் வாழ் தமிழர்களுடைய தலைவர்களுக்கும், தமிழர்களின் நலன் மேல் அக்கறை கொண்ட அத்தனை பேருக்கும், இந்த வினாக்கள் இந்த மன்றத்திலிருந்து எழும்பிப்போக வேண்டும் என்கிற கோரிக்கையோடுதான் நான் இந்த விவாதத்தை ஆரம்பித்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு, அவர்கள் நிற்கின்ற இடத்திற்கு, ஓடி வந்து கேட்கக்கூடிய மத்திய அரசு இன்று இருக்கிறது. தமிழர்கள் பிரச்சினை போல் மக்கள் உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஒரு பிரச்சினைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சரும், தமிழகத்தில் இருக்கின்ற மக்களும் கவலைப்படுகின்றார்கள் என்று சொன்னால், அதைப் பார்த்து அன்னை சோனியா காந்தி துடித்துப் போகிறார். பிரதமர் மன்மோகன்சிங் கவலைப்படுகின்றார். இந்த நாட்டிலே இருக்கின்ற வெளியுறவுத் துறை அமைச்சரை உடனே சென்று பார்த்து என்ன செய்யலாம் என்று கேளுங்கள் என்று கேட்டு வரச் சொல்கிறார். அப்படிப்பட்ட நிலை இருக்கின்ற இந்தப் பகுதியிலே, இலங்கை அதிபரையே வா என்று கூப்பிட்டால்கூட வந்து நிற்கிறார். ராஜபக்சேவைக்கூட இன்று நாம் கூப்பிட்டு என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று பேசுகின்ற தகுதியை, மரியாதையை, அங்கீகாரத்தை இந்த இந்திய அரசு வளர்த்திருக்கிறது.

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மத்திய அரசை வா என்று சொல்லக்கூடிய தகுதியை, அங்கீகாரத்தை, தலைமையை முதலமைச்சர் பெற்றிருக்கிறார்.

நான் கேட்கின்ற கேள்வி, இரண்டு பேரும் போர் நிறுத்தம் வேண்டுமென்று சொன்னீர்களே, போர் நிறுத்தம் என்பது, Is it the destination or is it a stop over. போர் நிறுத்தம் என்பது முடிவா? அல்லது போர் நிறுத்தம் என்பது வழியிலே இருக்கின்ற கட்டமா? அந்த வழியிலே இருக்கின்ற ஒரு கட்டம் வந்தால் இந்தப் போரினுடைய முடிவு என்பது பயணத்தினுடைய முடிவாக இருக்க வேண்டுமே, அந்த அடுத்த கட்டத்திற்கு இரண்டு தரப்பிற்கும் பொறுப்பேற்பது யார்? அந்த முடிவுகளை எடுத்தால்தானே நாம் படுகின்ற கவலையை, விலைவாசியைக் குறை என்று சொல்வதுபோல நாம் பேசிவிட்டுப் போக முடியுமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வது, தமிழீழம் வேண்டுமென்று அந்தப் பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு 23 நாடாளுமன்ற உறுப்பினர்களில், 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றிபெற்று, அந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும்தான் இன்றையதினம் நம் தமிழகத்தினுடைய தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். இந்தியப் பேரரசினுடைய தலைவராக இருக்கின்ற, அதை வழி நடத்திக் கொண்டிருக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். இந்தியா-இலங்கை ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் கிழக்கையும், வடக்கையும் ஒன்றாக இணைத்து தமிழர்களுக்கு அதிகாரம் தரப்பட வேண்டுமென்று சொன்ன, மறைந்த பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களுடைய கனவை பொய்யாக்கி, இராணுவத்தை முன்நிறுத்தி ஒரு தேர்தலை நடத்தி அங்கு பச்சை இன துரோகத்தை ராஜபக்சே அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. ஆதலால் அந்த அரசியல் பிரிவுகளாலும், ஏனைய TELO, PLOT, EPRLF, பத்மநாபன், டக்ளஸ் தேவானந்தம் போன்ற இதர அமைப்பினுடைய தலைவர்களோடு பங்காற்றிய முன்னணி தலைவர்கள்தான் இன்றைக்கு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆக, அனைவரும் ஏற்றுக்கொண்ட தீர்வுதான், இன்றைக்கு அங்கு அவர்களுக்கான அந்த உரிமை.

[திரு. தி. வேல்முருகன்] [2008 நவம்பர் 12

அந்தக் குழுக்களைக்கூட அழைத்து அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆக, அங்கு தமிழர் தலைவர்கள் இருக்கின்றார்கள். பேச்சுவார்த்தைமூலமாக சுமுகமான தீர்வு எட்டுவதற்கு அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் தமிழ் ஈழ அரசியல் பிரிவினுடைய தலைவராக இருக்கின்ற, உலகமெல்லாம் இருக்கின்ற வெளி நாடுகளுக்கெல்லாம் சென்று தங்கள் பக்கத்திற்கு ஈர்த்த அந்தத் தமிழ்ச்செல்வன் மறைவிற்குப் பிறகு, அந்தத் தமிழர்களுடைய ஒட்டுமொத்த பிரதிநிதியாக உலக நாடுகளை ஈர்த்திருக்கின்ற திரு. நடேசன் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இன்றையதினமும் தமிழக அரசுக்கும் இந்தியாவிற்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதனால், இலங்கைத் தமிழர்களுடைய தரப்பில் பேசுவதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அண்ணன் அவர்கள் கவனத்தில் கொண்டு நல்ல முடிவை நல்ல சூழலில் எட்டுவதற்கு முன்வாருங்கள் காங்கிரஸ் நண்பர்களே என்று உங்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்புச் சகோதரர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். அமரர் ராஜிவ் காந்திக்கும், அன்றைய அதிபர் ஜெயவர்த்தனேக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்று. அந்தத் தீர்வுக்குச் சம்மதிக்கின்றவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். நான் - Indo Sri Lankan Accord - The Sri Lankan Agreement - The President of the Democratic, Socialistic, Republic of Sri Lanka, His Excellency Mr. J.R. Jayawardene and the Prime Minister of the Republic of India, His Excellency Mr. Rajiv Gandhi having met at Colombo, on July 29th, 1987 and they have entered into this agreement. இந்த ஒப்பந்தத்திலே இருக்கின்ற முதல் ஷரத்து என்ன என்று சொன்னால்--Acknowledging that Sri Lanka is a multi-ethnic, multi-lingual, plural society consisting, inter alia, of Sinhalese, Tamils, Muslims and Burghers; recognising that each ethnic group has a distinct cultural and linguistic identity which has to be carefully nurtured. தமிழன் என்கிற இன அடையாளம், தமிழ் என்கிற மொழி நம்முடைய pluralistic society என்று சொல்கின்ற மாறுபட்ட கலாச்சாரம் கொண்ட இந்தியாவைப் போல பல தரப்பு மக்கள் வாழ்கின்ற ஒரு சமூகம்,

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அந்தச் சமூகத்திலே வாழ்கின்ற எல்லோருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து, சம அரசியல் கடமைகள், சம அரசியல் உரிமைகள் இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி அதற்கு மேலாக இன்னும் ஒரு முக்கியமான காரியம் என்ன என்று சொன்னால் "...These proposals are also conditional to the Government of India taking the following actions if any militant groups operating in Sri Lanka do not accept this framework of proposals for a settlement namely..." இந்த உரிமைகள் கிடைக்கிறதா என்று மேற்பார்வை செய்கின்ற பொறுப்பையும் ஒரு நாட்டினுடைய அதிபர் கையெழுத்துப் போட்டு இந்தியப் பிரதமருக்கு கொடுத்த ஒப்பந்தம் இந்த ஒப்பந்தம். நீங்கள் இன்று அதை ஏற்றுக்கொண்டு இந்த அடிப்படையிலே தீர்வு காண்பதற்கு நீங்கள் முழு சம்மதம் தருகிறீர்களா என்று இந்த அவையிலே, அதைத்தானே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நேற்று முன்தினம் அவர்கள் கொடுத்த அந்தப் பத்திரிகைச் செய்தியிலே, அந்த அறிக்கையில் அந்த வாசகங்கள்தானே இருக்கின்றன. அதிலே முதலமைச்சருடைய வாசகங்கள், முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் பத்திரிகைக்கு அளித்த செய்தியிலே சொல்கிறார்" 22-10-2008 அன்று நாடாளுமன்றத்தில் நமது வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் வைத்த அறிக்கையில் "Let me reiterate our conviction that there is no military solution to the ethnic conflict. What is required in Sri Lanka is peace, fully negotiated political settlement within the framework of a united Sri Lanka respecting the legitimate rights of the minorities including the Tamil community. இந்த வார்த்தைகளை முன்னிறுத்தி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இப்படி ஒரு பேச்சுவார்த்தை நடைபெறவும், அரசியல் தீர்வு காணவும் இலங்கையில் போர் புரிந்து கொண்டிருக்கின்ற இலங்கை இராணுவம், விடுதலைப் புலிகள் இரு சாராரும் இணக்கம் தெரிவித்து போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். இதையே தீர்மானமாகப் போடலாம். காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கருத்து இல்லை. பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்களுக்கும் இதைப் பற்றி மாற்று கருத்து இருக்க முடியாது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய தோழர்களுக்கும் மாற்று கருத்து உண்டா என்பதை இந்த அவையிலே சொல்ல வேண்டும். அதைப்போல, மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும், மற்ற அரசியல் கட்சி நண்பர்களும் இந்தத் தீர்மானத்தை, முதலமைச்சருடைய இந்த அறிக்கைக்கு மாறுபட்ட கருத்து கொண்டிருக்கிறார்களா, இல்லையா என்பதை இந்த அவையிலே பதிவு

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 12

செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், வெறும் வார்த்தை ஜம்பத்திற்காகவோ, அரசியல் விளையாட்டிற்காகவோ தீர்மானம் போட்டுப் பேசுகின்ற அவை அல்ல இந்த அவை. நாம் செய்கிற வாதத்தை நாம் ஏற்றுக்கொள்கின்ற கருத்தை, நாம் போடுகின்ற தீர்மானத்தை உலகம் முழுவதும் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திரு. ரவிக்குமார் அவர்கள் பேசுகிறபோது 1987-லே போடப்பட்ட ஒப்பந்தத்தைப் போன்ற ஓர் ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டும் என்று சொன்னாரே, 21 ஆண்டுகளுக்கு முன்னாலே அமல்படுத்துவதற்காகப் போட்ட ஒப்பந்தத்திற்கு நாங்கள் பெற்ற பரிசு தானே இது. ஒவ்வொரு ஆண்டும் நினைவு நாள் அங்கே போராளிகள், தீவிரவாதிகள் பலியான நாளன்று நினைவு நாள் என்று கொண்டாடுகின்ற அந்த நாளிலே பிரபாகரன் பேசுகிறார். உயிரோடு இருந்த ஆண்டன் பாலசிங்கம் சொல்லும்போது கடைசியாக கொடுத்த அறிக்கையிலே சொன்னார். "It is a tragic incident and it is time for India to forget and forgive" அது ஒரு துன்பியல் சம்பவம். அதை இந்தியா மன்னிக்க வேண்டும், மறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால், இந்த வருடம் நம்முடைய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பேசியிருக்கிறார். அகில உலக நாடுகளுக்கு அவர் எச்சரிக்கை விடுக்கிறார். "Don't think about the mistake India committed in 1986 and don't make the mistakes again and we will not forget and forgive what India had done to us." இந்த ஆண்டு பேசியது. இலங்கைக்கு இராணுவத்தை நாம் அனுப்பவில்லையா, எங்கள் தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள் சர்வதேச நாடுகளினுடைய சட்டத்தை எல்லாம் மீறி அண்டை நாடுகளுடைய விமான பரப்பிலே நம்முடைய விமானத்தைப் பறக்கச் செய்து அவர்களுக்கு உணவுப் பொட்டலம் வழங்கவில்லையா? உலகம் முழுவதும் உள்ள நாடுகள் எல்லாம் கொதித்து எழுந்து கேட்டபோது தலைவர் ராஜிவ் காந்தி எதற்காகச் சொன்னார், யுத்தம் தொடங்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. "I wanted to deliver a message" இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் துடித்துப் போகின்றபோது, எங்கள் நாட்டின் தமிழ்ச் சமுதாயம் துடித்துப் போகின்றபோது அதை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன் என்று சொன்ன ராஜிவ் காந்திக்கு 22 ஆண்டுகள் கழித்து இந்த அவையிலே என்ன பேசுகிறோம், அவர் செய்தது சரி என்றுதானே இன்று பேசுகிறோம். இதை யார் பொறுப்பு எடுத்துக்கொண்டு செயல்படுத்துவது? இன்று இலங்கையிலே வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு என்ன ஏற்பட்டிருக்கிறது? அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அவலத்தைப் பார்த்து நாமே கண்ணீர்

2008 நவம்பர் 12] [இரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

வடிக்கின்றோமே. இன்று தலைவர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருக்கலாம். ஆனால், இன்று உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஒப்பற்ற தலைவர் அல்லவா! 70 ஆண்டுகள், 60 ஆண்டுகள் அனுபவம் பெற்ற தலைவர் அல்லவா! இந்த அவையிலே இருக்கின்ற பேராசிரியர் பெருந்தகை 60 ஆண்டுகள், 70 ஆண்டுகள் களம் பல கண்டவர்கள், நம்முடைய மருத்துவர் ஐயா டாக்டர் ராமதாஸ் அவர்கள், இவர்கள் எல்லோரும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களாக இருந்தாலும்கூட தமிழ்ச் சமுதாயத்தை செழுமைப்படுத்திய தலைவர்கள் அல்லவா! அப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இன்று இலங்கையிலே எங்கே?

பிற்பகல் 12-25

இலங்கையிலே சொல்வதைக் கேட்கக்கூடிய மிகப் பெரிய தலைவர்கள் எல்லாம் இன்று என்ன ஆனார்கள்? உலகத் தமிழ்ச் சமுதாயத்தை மட்டும் அல்ல, உலகம் முழுவதும் உற்று பார்க்கக்கூடிய பல பெரிய தமிழறிஞர்கள் யாழ்ப்பாணத்திலே இருந்தார்களே, உலகமே ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழ்த் தலைவர்கள் இருந்தார்களே, தமிழர்களின் தலைவர்கள் மட்டும் அல்ல, அகில உலகத் தலைவர்களோடு சரி சமமாக உட்கார்ந்து பார்த்து பேசக்கூடிய தமிழ்த் தலைவர்கள் எல்லாம் இன்று என்ன ஆனார்கள்? அத்தகைய தமிழ்த் தலைவர்கள் இல்லாத காரணத்தினாலேதான் இன்று அங்கே தமிழ்சமூகம் படுகின்ற அவலத்தை உலகச் சமுதாயத்தின் இடையிலே கொண்டு செல்வதற்குக்கூட ஆள் இல்லை. கேட்பதற்குக்கூட நாதி இல்லாத ஒரு சமூகமாக அந்தச் சமூகம் நிற்கின்றபோது, நாம் இரத்தத்தில் ஒட்டியுள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தினால் கண்ணீர் விடுகின்றோம்.

இப்படிப்பட்ட அவலம் அங்கே ஏற்பட்டு இருப்பதற்கு என்ன காரணம்? போர் நிறுத்தம் என்று சொல்வதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், போர் நிறுத்தத்திற்கு முன்பு அந்த நோய்க்கு என்ன காரணம் என்பதைப் பாருங்கள்? காரணமாக இருந்தவர்களுக்கும் அறிவு சொல்லக்கூடிய, வலியுறுத்தக்கூடிய பொறுப்பைத் தட்டிக் கழிக்காதீர்கள். அதுதான் காங்கிரஸ் கட்சி வைக்கின்ற வேண்டுகோள்.

இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக ஆழ்ந்து, தெரிந்து இந்தத் தீர்மானத்தினை எடுத்து இருக்கின்றார்கள், இந்தத் தீர்மானத்திலே நீங்கள் சொல்வதைப்போல சேர்க்கவோ, ஒட்டவோ

வேண்டாம். இந்தத் தீர்மானம் நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. இந்தத் தீர்மானம் அவர்கள் தந்திருக்கின்ற பத்திரிகைச் செய்தியையொட்டியே இருக்கின்றது.

எனவே, நாம் இன்று விடுக்கின்ற வேண்டுகோள், மத்திய அரசுக்கு மட்டுமல்ல, இலங்கையிலே இருக்கின்ற சிங்கள வெறியர்களுக்கு மட்டுமல்ல, இலங்கை அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, தமிழ்ச் சமூதாயத்தை இந்த நிலைக்குக் கொண்டு சென்ற அத்தனை பேருக்கும் நாம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். இதைப்போன்ற வாதம் இந்த அவையிலே நடப்பது இதுவே கடைசியாக இருக்க வேண்டும். இதுவே கடைசி போர் நிறுத்தமாக இருக்க வேண்டும். நாம் தலையிடுவதும் இதுவே கடைசியாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய உணர்வுகளோடு நாம் இந்தத் தீர்மானத்தைப் பார்க்க வேண்டும். நான் மேலும் மேலும் நம்முடைய உணர்வுகளையெல்லாம் கிளறி, நம்முடைய உணர்ச்சிகளையெல்லாம் தூண்டி இதை வெறும் வாதப் பொருளாக ஆக்க விரும்பவில்லை. அமைதியை காங்கிரஸ் கட்சி மனப்பூர்வமாக விரும்புகிறது. மத்திய அரசு மனப்பூர்வமாக விரும்புகிறது.

மீனவர்கள் சுடப்படுவதைப் பற்றி நம்முடைய அருமை நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒரு சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறேன். இந்த மீனவர்கள் கடந்த முறை சுடப்பட்டபோது தமிழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் United Progressive Alliance, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் பெருமக்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள் பிரதமரைச் சந்தித்தார்கள். பிரதமரைப் பார்த்து தமிழக மீனவர்கள் இப்படித் தொடர்ந்து சுடப்படுவது குறித்து அவர்களுடைய கவனத்தைக் கோரினார்கள். உடனே பிரதமர் என்ன செய்தார் தெரியுமா? பாதுகாப்பு ஆலோசகரைக் கூப்பிட்டு உட்கார வைத்து நீங்கள் பேசுங்கள் என்று சொன்னார். அவர் என்ன சொன்னார்? ராஜபக்சேவினுடைய அரசாங்கம் தந்து இருக்கின்ற விளக்கத்தைச் சொன்னார். அவர்கள் சொல்கிறார்கள், "நாங்கள் சுடவில்லை. நாங்கள் சுட்டதாக நீங்கள் நிரூபித்தால் அதற்கான முழு பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எங்கள்மேல் ஒரு தவறான தகவலும் கருத்தும் தமிழ் மக்கள் மத்தியிலே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சில வேண்டாத விரோதிகள் செய்கிறார்கள்" என்று அவர்கள் தரப்பு வாதத்தை வைக்கிறார்கள்.

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இடையிலே நம்முடைய சட்டமன்றத்திலேகூட நடந்தது. ஒரு முறை நம்முடைய மீனவர்கள் கடத்தப்பட்டுவிட்டார்கள் என்று சொன்னவுடனே, நம்முடைய முதலமைச்சர் இந்த அவையிலே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், (குறுக்கீடு) அதாவது நம்முடைய அவையிலேகூட கடந்த ஆண்டு ஒரு சம்பவம் நடந்தது. சில மீனவர்களைக் காணோம். சில மீனவர்களை இராணுவம் பிடித்துச் சென்றுவிட்டது என்று நம்முடைய அவையிலே ஒரு தகவல் வருகின்றபோதுகூட நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். விடுதலைப் புலிகள் கடத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது என்று சொன்னவுடனே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், ஜனநாயக மரபு காக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மூன்று நாட்கள் கழித்து அவர்களே திரும்ப இந்த அவைக்கு வந்து யாரும் கேட்காமல் "நான் ஒத்துக்கொள்கிறேன், நீங்கள் சொன்னது சரிதான். அதைப்போலத்தான் நடந்திருக்கிறது" என்று சொல்லி, அதற்குப் பிறகு சரியானவர்களுக்கு, சரியான முறைப்படி தகவல் அனுப்பிய உடனே அந்த மீனவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

*பிற்பகல் 12-30*

நேற்று முன்தினம்கூட இலங்கைத் தூதரகம் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. அதற்கு நம்முடைய பிரதமர் என்ன செய்தார் தெரியுமா? ராஜபக்சேயினுடைய அரசாங்கத்தைக் கூப்பிட்டுப் பேசிய உடனே, இலங்கை அதிபர் என்ன சொல்கிறார், உங்கள் மீனவர்கள் எங்கள் கடற்கரை வரை வந்து மீன் பிடிக்கட்டும். அதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர்களுக்கு நாங்கள் அடையாளச் சீட்டு வழங்குகிறோம். அந்தப் படகுகளுக்குத் தனி விளக்குகள் வழங்குகிறோம். அதை நாங்கள்தான் செய்தோமா என்பதை நீங்கள் பார்ப்பதற்கு நீங்களும் வேண்டுமென்றால் எங்களோடு joint patrolling வாருங்கள் என்று கூப்பிடுகிறார்கள். இதற்கு என்ன பதில் நம்மிடம் இருக்க முடியும்? நாங்கள் சுடவில்லை. நாங்கள் சுடுகிறோமா என்று பார்ப்பதற்கு நீங்களும் உங்கள் இராணுவத்தை எங்களோடு அனுப்புங்கள் என்று கேட்கின்றபோது அதற்கு நம்மிடம் என்ன பதில் இருக்கிறது? அதற்கு பதில் நாம் வைத்திருக்கிறோமா? நாம் joint patrolling என்று சொல்லக்கூடிய அந்த இணை பந்தோபஸ்துக்கு ஒத்துக்கொள்கிறோமா? நம்முடைய மீனவர்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்கிற உணர்வு நமக்கு இருந்தால்,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 12

நம்முடைய மீனவர்கள் சுடப்படாமல் அவர்களைக் காக்க வேண்டுமென்ற நினைப்பு நமக்கு இருந்தால், நாம் அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகிறோம் என்பதையும் இந்த அவை முடிவு செய்யட்டும். நான் யாருக்கோ தனியாகச் சொன்னதைச் சொல்லவில்லை. நம்முடைய அமைச்சர்களுக்கு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, பிரதமரும், பிரதமருடைய பாதுகாப்பு ஆலோசகரும் சொன்ன விவரங்களை நேரிடையாக அந்தக் கூட்டத்திலே பங்குபெற்றவர்கள் சொல்லியதை, இந்த அவையிலே நான் பதிவு செய்யலாமா என்று கேள்வி கேட்டு, பதிவு செய்யுங்கள் என்கிற அனுமதியோடுதான் இந்தத் தகவலை நான் தருகிறேன். எனவே, மத்திய அரசு ஒரு நாளும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை என்பதை நான் மிகப் பணிவோடு இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவையில்லாமல் அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்கிற ஆசை காங்கிரஸ் கட்சிக்கோ, காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கோ ஒரு நாளும் கிடையாது. இந்த நாட்டு மக்கள் தந்த வாக்குகளை, அந்த வாக்குகளின் அடிப்படையில் இருந்த நம்பிக்கையை என்று எங்களால் காப்பாற்ற முடியாது என்று நினைக்கிறோமோ, அன்றே இந்தப் பதவி வேண்டாமென்று சொல்வதற்கு நாங்கள் தயங்க மாட்டோம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, எல்லை கடந்து வாழ்கின்ற தமிழ் உணர்வுள்ள மக்களைப் பொறுத்தவரை, நாங்கள் அன்னியர்கள் என்று நினைக்கவில்லை. அவர்கள் இரத்தத்தில் ஒட்டியவர்கள், தமிழ்ச் சமுதாயம் எங்களைப் வளப்படுத்திய, வாழ்வுபடுத்திய சமூகம். அந்தத் சமூகத்தின் உரிமைகளையும், கடமைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது. மத்திய அரசுக்கு இருக்கிறது. அதை நிறைவாகச் செய்திருக்கிறோம் என்கிற நம்பிக்கையோடு அதைச் செய்ய வைக்கிற சக்தி கொண்ட, அதை இயக்க வைக்கின்ற பொது அறிவும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தினை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வழிமொழிந்து போர் நிறுத்தம் வேண்டும் என்று பதிவு செய்து, ஆனால் போர் நிறுத்தம் என்பது, it is not the end, it is only the way, அது வழிதான், முடிவு அல்ல என்பதைப் பதிவு செய்து உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

2008 நவம்பர் 12]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்காகவும் குறுக்கீட்டிற்காகவும் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு கொறடா அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தமிழக மீனவர்களைக் கடத்திச் சென்றவர்கள் அல்லது சுட்டுக் கொன்றவர்கள் சிங்களக் கடற்படை அல்ல. அதற்கு இலங்கை அரசு பொறுப்பேற்க முடியாது. யார் என்று நீங்கள் நிரூபிக்க வேண்டுமென்று அவர்கள் தரப்பிலே கேட்பதாகச் சொன்னார்கள். ஆனால், கடத்திச் செல்லப்பட்டு பாதிக்கப்பட்ட மீனவர்கள் திரும்பி வந்த நேரத்தில் சொல்வது, 'எங்களை இலங்கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றார்கள். கொடுமைப்படுத்தினார்கள். மீன்களை எல்லாம் அள்ளிச் சென்றார்கள்' என்று அவர்கள் பேட்டியிலே சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல அதையடுத்து நாம் தமிழக அரசின் சார்பிலே, அரசியல் கட்சிகளின் சார்பிலே இந்திய அரசுக்குக் கோரிக்கை வைக்கிறோம். இந்திய அரசு சிங்கள அரசைக் கேட்டுக்கொள்கிறது. கேட்டுக் கொண்ட பிறகு, சிங்கள அரசாங்கம் சிறையில் அடைத்தவர்களை விடுதலை செய்கிறது. ஆகவே, இதிலிருந்தே நாம் தெரிந்துகொள்கிறோம், சிங்களக் கடற்படைதான் சுட்டுக்கொல்கிறது, கடத்திச் செல்கிறது, மீண்டும் விடுதலை செய்கிறது என்பதுதான் நிலை. ஆகவே, உங்களுக்கு நான் இதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், குறுக்கீட்டிற்காக அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நேரம் இல்லை. மற்ற விவாதத்திற்குச் செல்ல வேண்டும். திரு. ஓ.பி.எஸ். பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். உங்களுக்குப் போதுமான அளவு நேரம் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Controversial-ஆகப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) No. (குறுக்கீடு) சொல்லுங்கள், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டது குறித்து திரு. ஜி.கே. மணி அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அதைப்பற்றித்தான் நான் சொல்கிறேன். நான் ஒன்றும் விவாதத்திற்கோ அல்லது வேறு விஷயத்திற்கோ

போகவில்லை. தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவது சம்பந்தமாக இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு ஏற்கெனவே பேசிய பேச்சுக்களையும் இங்கே குறிப்பிட்டவர்கள் சொன்னார்கள்.

*பிற்பகல் 12-35*

அதிலே நான்கூட வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அப்படிச் சுடப்பட்டது யாரால் என்ற பிரச்சினை வந்தது. அப்போதும் பத்திரிகைகள், ஊடகங்கள்மூலமாக அந்தச் செய்திகள் வந்தன. அப்போது நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுகிறபோது, தமிழக மீனவர்கள் சுடப்பட்டது இலங்கை இராணுவத்தாலா அல்லது விடுதலைப் புலிகளாலா என்ற பிரச்சினைகூட வந்தது; பகிரங்கமாக இந்த அவையிலே நான் கேட்டது, அப்படி யார் சுட்டார்கள் என்றாலும் நம்முடைய இந்திய நாட்டு இராணுவம் சுடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிலே ஒருவரைச் சுட்டு இந்தக் கரையிலே கொண்டுவந்து விடுதலைப் புலிகள்தான் தமிழக மீனவர்களைச் சுட்டார்கள் என்று அடையாளம் காட்ட வேண்டும் அல்லது இலங்கை இராணுவம்தான் சுட்டது என்று அடையாளம் காட்ட வேண்டும், இதைச் செய்வதற்கு மத்திய அரசு ஏன் முயற்சி எடுக்கவில்லை என்ற வாதத்தைக்கூட நான் இந்த அவையிலே பேசியிருக்கிறேன். ஏற்கெனவே பேசியதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து-- விளக்கத்திற்காகத்தான். அதனால் இப்போது அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்புகிற இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுத்து கடல் எல்லைகளுடைய அளவைக் கண்டறிந்து, அடையாள அட்டை கொடுப்பதோ, அவர்களைக் கண்காணிப்பதோ, அந்தக் காரியத்தை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். இலங்கை அரசு கொடுக்கும் அடையாள அட்டையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது எந்தவகையிலும் பொருத்தமானது அல்ல, மத்திய அரசு அந்தப் பொறுப்பை தட்டிக் கழிக்கக் கூடாது என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். அதை தயவுசெய்து அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சிவபுண்ணியம் சொன்னதைத்தான் நானும் சொன்னேன். அவர்கள் சொல்கின்ற அதே கருத்தைத்தான் நான்

2008 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

சொன்னேன். சுட்டவர்கள் யார் என்று கண்டுபிடிக்கின்ற பணியை யார் செய்வது? இன்று இலங்கை அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள், 'உங்கள் இராணுவத்தையே எங்களுக்குப் பக்கத்தில் அனுப்புங்கள். நாங்கள் செய்வதை அவர்களே கண்காணிக்கட்டும். நாங்கள் சுட்டால் அதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்' என்றுதான் சொல்கிறார்கள். அதற்கு நாம் சம்மதிக்கிறோமா? இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு ஒத்துக்கொள்கிறதா, சம்மதிக்கிறதா என்பதுதான் இங்கே கேள்வியேயொழிய, இலங்கை சொல்வது சரி என்று நான் சொல்லவில்லை. நம்முடைய மீனவர்களைச் சுட்டுக்கொன்றது விடுதலைப் புலிகள் என்று நான் சொல்லவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பிலேயும், நம்முடைய மீனவர்களும் இலங்கை இராணுவம்தான் மீனவர்களைச் சுட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், இலங்கை கடற்படையைச் சார்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள், "நாங்கள் ஏன் சுட வேண்டும், நாங்கள் சுடுவதற்கான அவசியம் இல்லை. நாங்கள் சுடுகிறோமா, இல்லையா என்பதை நீங்களே உங்கள் இராணுவப் படையை வைத்து பக்கத்தில் உட்கார்ந்து பாருங்கள்" என்று சொல்கிறார்கள். அதற்கு நாம் அனுமதிக்கப் போகிறோமா, அதற்கு ஒத்துழைக்கப் போகிறோமா, அதற்கான அனுமதியை இங்கே இருக்கின்ற அரசியல் கட்சிகள் தரத் தயாராக இருக்கின்றனவா என்பதுதான் நான் கேட்க ஆசைப்படுகின்ற கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போரை நிறுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் சட்டமன்றத்திலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளுடைய நிலை பற்றி இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அனைவருடைய ஒட்டுமொத்தக் கருத்தும் அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள், அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள், அவர்கள் காலங்காலமாகப் பெற்றுவந்த வாழ்வின் உரிமைகள், இவை எல்லாம் நிரந்தரமாக, அரசியல் தீர்வாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லாமல், நேற்றும் இங்கு பேசப்பட்டது, இன்றைக்கும் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 நவம்பர் 12 பிற்பகல் 12-40

நேற்று நாம் பேசுகின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள், அரசியல் ரீதியான சில மோதல்கள்கூட வந்தன. அதைத் தொடர்ந்து நான் பேசுகின்றபோது நாம் ஒருமித்த கருத்தை, ஒட்டுமொத்தக் கருத்தாக இலங்கைத் தமிழர்கள், அப்பாவித் தமிழர்கள் காக்கப்பட வேண்டும். நீண்ட நெடிய காலமாக இந்தப் பிரச்சினையில் பல்வேறு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கும் நிலையிலும்கூட, தீர்க்கப்படாமல் இருக்கின்ற இந்தப் பிரச்சினையில் நமக்குள் இருக்கின்ற பல்வேறு வகையான அரசியல் ரீதியான கருத்துகளைக்கூட நாம் இங்கே பேசி இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்றுத் தராமல், வேறு திசையை நாம் சென்றடைந்துவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் நேற்று நான் என்னுடைய கருத்தினை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்திருந்தேன். ஆனால், இன்றைக்கு வந்திருக்கின்ற முரசொலி பத்திரிகையில் 'பச்சைத் தமிழர் பன்னீர்செல்வம்' என்று கட்டம் கட்டப்பட்டு ஒரு செய்தி அதிலே வந்திருக்கின்றது. (குறுக்கீடுகள்) இங்கே அனைவரும் சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள், உண்மையைத்தான் சொல்லியிருக்கின்றார்கள் என்று. இங்கே முரசொலி பத்திரிகை எனக்கு ஒரு சான்றிதழ் கொடுத்திருக்கின்றது, 'பச்சைத் தமிழர் பன்னீர்செல்வம்' என்று தந்திருக்கிறது. எனக்கு ஏற்கெனவே சான்றிதழ் தரப்பட்டிருக்கின்றது. உங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது, ஆந்திராவிலே இருக்கின்றவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது, கர்நாடகத்திலே இருக்கின்றவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது, ஒரிசாவிலே இருக்கின்றவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது, டெல்லியிலே இருக்கின்றவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது. Nationality என்று வருகின்றபோது நாம் அனைவரும், எல்லோரும் இந்தியர்கள் என்ற சான்றிதழ் எனக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நம் அனைவருக்குமே தரப்பட்டிருக்கின்றது. அந்தச் சான்றிதழ் இந்தியாவிலே வசிக்கின்ற அத்தனை பேர்களுக்கும் இருக்கின்ற காரணத்தினால்தான், மறைந்த நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 1987-லே ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா ஒப்பந்தம், அவர்களுடைய இடைவிடாத, தீவிரமான முயற்சியினால் போடப்பட்டது. இலங்கைக்கே அவர்கள் சென்றார்கள். இன்றைக்குக்கூட ராஜபக்சே இந்தியாவுக்கு வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைக்கே சென்று அந்த ஒப்பந்தத்தைப் போடுகின்ற நேரத்தில்கூட அந்த ஒப்பந்தத்திற்கு

2008 நவம்பர் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இலங்கையிலே இருக்கின்றவர்கள் எந்தமாதிரியொரு மரியாதை கொடுத்தார்கள் என்றால், திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சிங்கள சிப்பாய்களினுடைய அணி வகுப்பைப் பார்வையிடுகின்ற நேரத்தில் ஒரு சிங்களச் சிப்பாய் துப்பாக்கி மட்டையைத் திருப்பி வைத்துக்கொண்டு அவரைத் தாக்குகின்ற ஒரு சூழ்நிலைகூட அந்த நேரத்திலே இருந்தது. நாமெல்லாம் கேள்விப்பட்டிருக்கின்றோம், பஞ்சாயத்துப் பேசுகின்றவர்கள், பஞ்சாயத்துதாரராக இருக்கின்ற தலைவர்கள் சில நேரங்களில் அவர்களே யாருக்காகப் பஞ்சாயத்துப் பேசப் போகின்றார்களோ அவர்களால் மாய்க்கப்படுகின்ற ஒரு சூழ்நிலைகூட பல்வேறு நிகழ்ச்சிகளில் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்த ஒரு நிலைதான் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் அங்கே ஏற்பட்டது. ஒருபுறம் அந்த ஒப்பந்தத்தால் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று சிங்களர்களும், இன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சிக் கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்களே, சில மாதங்களுக்கு முன்பாக, சென்ற மாதம் L.T.T.E. தலைவர் பிராபகரன் அவர்கள் 'உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுகின்றேன்' என்று சொல்லி, 1987-ல் ஏற்பட்ட ஒப்பந்தம், அதனால் நமக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றி அவர்கள் சொன்னார்கள் அழகாக. இருதரப்பினுடைய பட்சபாதங்களை ஏற்றுக்கொண்டு அன்றைக்கு பாரதப் பிரதமர் இந்த மண்ணில், அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய அழகு மேனி சின்னாபின்னப்படுத்தப்பட்டு தமிழகம் ஒரு தீராத பழிக்கு உள்ளாக்கப்பட்டது. இப்போதுகூட அந்த நிகழ்வை நினைவுகூர்ந்து ராஜீவ் காந்தி அவர்களுடைய புதல்வர் திரு. ராகுல் காந்தி அவர்கள்கூட என் தந்தைக்கு நேர்ந்த அந்தச் சோகத்திற்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்பட்டதாகக்கூட நாம் பத்திரிகைகளிலே செய்திகளைப் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, எது எப்படியிருந்தாலும் அங்கே வாழ்கின்ற நம்முடைய இலங்கைத் தமிழர்கள் தினந்தோறும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு அவர்கள் நிம்மதியற்ற நிலையில், வாழ்க்கையை நடத்த முடியாமல் கடந்த 40, 50 ஆண்டுகாலமாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட்டாக வேண்டும். அந்தத் தீர்வினை ஏற்படுத்துகின்ற பொறுப்பு நம்முடைய இந்திய அரசுக்கு உண்டு. ஏனென்று சொன்னால், நம்முடைய பக்கத்து நாடான வங்காளதேசத்தில் ஏற்பட்ட பிரச்சினையில் எவ்வாறு இந்தியா தலையிட்டதோ, அதைப்போல, இலங்கையில் நிலவக்கூடிய பிரச்சினைக்கு, முன்பு பல கசப்பான சம்பவங்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 நவம்பர் 12

நடைபெற்றிருந்தாலும், அவை எல்லாம் ஒருபுறமாக இருந்தாலும், இன்றைக்கு தமிழ் இனமே அங்கே அழிந்துபோகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நாம் அனைவரும் ஒட்டுமொத்தக் குரலாக இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் காக்கப்பட வேண்டும் என்ற கருத்தினையொட்டி, அனைவருடைய ஆதரவோடு, இன்றைக்கு இந்த அரசின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 12-45*

நாம் தீர்மானம் நிறைவேற்றி அதோடு நம்முடைய பணி நிறைவடைந்ததாக தமிழக அரசும், மத்திய அரசும் எண்ணிவிடாதவகையில், மத்தியில் ஆளுகின்ற அரசில் காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் அமைச்சர்களாகவும் இன்றைக்கு அங்கே வீற்றிருக்கின்றார்கள். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், தொடர் நிகழ்வாக மத்திய அரசைத் தொடர்ந்து தொடர்புகொண்டு விடுதலைப் புலிகள் இன்றைக்குப் போர் நிறுத்தம் அறிவித்து இருக்கின்றார்கள். இலங்கை அரசும் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். அருமை அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் சொன்னார்களே, இலங்கை சார்பாக இலங்கை அரசு பேச முற்பட்டால், எதிர்தரப்பிலிருந்து இலங்கைத் தமிழர்கள் சார்பாக யார் பேச வரவேண்டும், அதற்கு யார் உத்தரவாதம் தருவது என்று கேட்டார்கள். நல்ல கேள்வி. அதையும் இந்திய அரசே இலங்கையில் வாழ்கின்ற பல்வேறு பிரிவுகளின் தலைவர்களுக்குச் செய்தியாக, இலங்கை அரசு பேசுவதற்குத் தயார் என்ற நிலையில் நீங்களும் சமரசம் பேசுவதற்கு உங்களில் யாராவது பொறுப்பு ஏற்றுக்கொண்டு முன்வர வேண்டும் என்று மத்திய அரசு அவர்களிடையே இணக்கமான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கிருந்து வருகின்ற செய்திகள் உள்ளபடியே மிகுந்த மனவருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கின்றன. இலங்கையில் இருக்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், 1987-ல் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இலங்கைத் தமிழர்கள் வாழ்வியல் உரிமையைப் பெற்றிருப்பதாக அந்த ஒப்பந்தத்தில் ஷரத்தே இருக்கின்றது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கிலும், கிழக்கிலும் தேர்தல்கள் நடத்தப்பட்டு, பிறகு இரண்டு மாகாணங்களையும் இணைத்து, அரசியல் ரீதியான தீர்வு அங்கு எட்டப்பட வேண்டும் என்றுதான் 1987-ல் ஜெயவர்த்தனே-ராஜிவ் காந்தியினுடைய ஒப்பந்தத்தில்

2008 நவம்பர் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே, காலம் காலமாக இலங்கையில் வாழ்வுரிமை பெற்ற நம்முடைய இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான சுமூகமான தீர்வு காண்பதில், நம்முடைய தமிழக அரசும், மத்திய அரசும், இணைந்து, தொடர்ந்து விடாமுயற்சிகளை மேற்கொண்டு, அங்கு ஒரு சுமூகமான சூழ்நிலை, அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேநேரத்தில், 1974, 1976 காலகட்டத்தில் கச்சத் தீவை நாம் இலங்கைக்குக் கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலை அந்த நேரத்திலே இருந்தது. அதன் பயனாக இன்றைக்கு 12 மாவட்டங்களிலே இருக்கின்ற கடலோர மீனவர்கள் கச்சத் தீவிற்கு அருகில் சென்றுகூட மீன் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. தினந்தோறும் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும், இங்கிருந்து உயிரோடு செல்கின்ற மீனவர்கள் அங்கேயிருந்து வருகின்ற போது உயிரிழந்த நிலையில் வந்து சேருகின்ற நிகழ்வும் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற அதே நேரத்தில், தமிழக மீனவர்களுக்கும் அவர்களுடைய மீன் பிடிக்கின்ற உரிமையைக் கச்சத் தீவில் பெறுவதற்குரிய காரியங்களையும் இந்த நேரத்திலே மத்திய அரசை வலியுறுத்தி, அந்தப் பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, அரசின் சார்பாக கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆதரித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில் முன்மொழியப்பட்ட, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்த அரசின் தீர்மானத்தை நான் முன்மொழிந்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. ரவிக்குமார் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. கண்ணப்பன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக

செல்வி பாலபாரதி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும். அ.இ.அ.தி.மு.க. எதிர்க் கட்சித் துணைத் தலைவர்--அவர் சொன்னதற்காக நான் திரும்பப் பெறப்போவதில்லை--பச்சைத் தமிழர் பன்னீர்செல்வம் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி)--அதற்காக அவர் கவலைப்படக் கூடாது-- "பச்சைத் தமிழர்" என்று பெருந்தலைவர் காமராஜருக்கு பெரியார் பட்டம் கொடுத்தார். அதைத்தான் முரசொலி கொடுத்திருக்கிறது. அதுவும் முரசு அடித்துக் கொடுத்திருக்கின்றது--(சிரிப்பு)--அவர்களும் நீண்ட விளக்கங்களை வழங்கி, இறுதியாக இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றம் ஒரேமனதாக ஏற்றுக்கொண்டது என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

இடையிடையே நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் பேசும்பொழுது சிவபுண்ணியம் அவர்களுக்குத் தோன்றிய சில கருத்துகளால் இருவரிடையே போர் ஏற்பட்டாலும்கூட, முதலில் அந்தப் போர் நிறுத்தம் ஏற்பட்டு, அதற்குப் பிறகு பல செய்திகளை, பல விவரங்களை இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வெளியிட்டிருக்கின்றார்கள்.

நான் முதலில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை விளக்கி நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்பதற்காக நீண்ட நேரம் நான் பேச விரும்பவில்லை, தேவையும் இல்லை. ஏனென்றால், பல மணி நேரம் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்ட ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இலங்கைப் பிரச்சினையிலே மேற்கொண்ட அணுகுமுறைகள் எப்படியெல்லாம் இருந்தன, ஏன் அதிலே சில மாற்றங்கள் ஏற்பட்டன, முதலில் இருந்த வேகம் தணிந்ததற்கு என்ன காரணம் என்பவைகளையெல்லாம் இதே மன்றத்திலே நான் விளக்கியிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-55*

இதை அரசியலாக ஆக்கிவிடக்கூடாது என்று நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஜி.கே. மணி அவர்களும் அவர்களுடைய உரையிலே அதைக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் இந்த மாமன்றத்திற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நாம் இலங்கையிலே நடைபெறுகின்ற படுகொலைகளுக்கு யார் காரணம், எந்த இன மக்கள் காரணம் என்பதை எடுத்துச் சொல்லும்பொழுது சிங்கள வெறியர்கள் காரணம் என்றும், தமிழ் இனத்தாரைப் படுகொலைக்கு

உள்ளாக்குகிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லி வருகிறோம். அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இது 40, 50 ஆண்டுகாலமாக இருந்து வருகின்ற வேறுபாடு, மாறுபாடு, சிக்கல். இங்கே குறிப்பிட்டார்களே தந்தை செல்வா அவர்களுடைய காலத்திலிருந்து இதுவரையிலே தமிழர்களுடைய உரிமைகளுக்காக, தமிழ் மொழியினுடைய மேன்மைக்காக இலங்கையிலே உள்ள தமிழர்கள் பணியாற்றியிருக்கின்றார்கள், பாடுபட்டிருக்கின்றார்கள். பல தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். பல முறைகளில், அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

நம்முடைய அன்பிற்குரிய நண்பர் பன்னீர்செல்வம்கூட தமிழர் என்று சொன்னதை ஏதோ ஒரு வகையிலே ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து, தான் இந்தியன் என்று குறிப்பிட்டார். ஆனால் அவரும் சரி, நானும் சரி, அவருடைய கட்சியிலே உள்ளவர்களும் சரி, இந்தக் கட்சியிலே உள்ளவர்களும் சரி, இலங்கைத் தமிழர் படுகொலை என்றுதான் சொல்கிறோமே அல்லாமல் இலங்கை இந்தியர் படுகொலை என்று யாரும் சொல்வதில்லை. இலங்கை இந்தியர் படுகொலை என்றால், அது எந்தக் கோணத்திலே பார்க்கப்படும் என்பதையும், இலங்கைத் தமிழர் படுகொலை என்கிறபோது எந்தக் கோணத்திலே பார்க்கப்படுகிறது என்பதையும் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் நான் வெளிப்படையாக சொல்லாமலேயே உள்ளுணர்வு உங்களுக்கு அந்த உண்மையை எடுத்துச் சொல்லும்.

தமிழனாகப் பிறந்துவிட்டக் காரணத்தாலேயே இந்த உலகத்திலே எந்த இடத்திலும் நம்முடைய மதிப்பு போற்றப்படாமல், ஏற்கப்படாமல், நம்முடைய மரியாதை ஏற்கப்படாமல், போற்றப்படாமல், ஏன் மதிப்பு, மரியாதை, மானம் இவைகளை மாத்திரமல்ல, நம்முடைய உயிர், உடைமை இவைகள் எல்லாம்கூட கேவலமாகக் கருதப்படுகின்ற ஒரு சூழ்நிலை இந்த உலகத்திலே தமிழனுக்குத்தான் இருக்கிறது. வேறு யாருக்கும் இல்லை. எனவே, தமிழன் என்று சொல்லிக்கொள்வதால் நமக்கு ஏற்படுகின்ற பெருமையைவிட தமிழனாக இருப்பதால்தானே இந்த நிலை என்று வருந்த வேண்டிய ஒரு பெரும் சோகம் நம்மை கருமேகமாகக் கப்பிக்கொள்வதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதனால்தான் சொல்லுகின்றேன், நாம் இலங்கையிலே நடைபெறுகின்ற இந்தப் படுகொலைக்குக் காரணத்தைச் சொல்லுகிற நேரத்திலும், அதைக் கண்டிக்கிற நேரத்திலும் நாம் ஒற்றுமையாக இருந்து இங்கே உள்ள தமிழர்கள் ஒரே அணியில் இருந்து செய்கிறோமா என்று நிலைக் கண்ணாடிக்கு முன்னால் நின்று நம்மை நாமே

பார்த்துக்கொள்ள வேண்டும். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இனிமேலாவது நாம் திருத்திக்கொள்ள வேண்டும். எவ்வளவுதான் நம்மிடத்திலே ஆதங்கங்கள் இருந்தாலும், போட்டி, பொறாமைகள் இருந்தாலும், அரசியல் வேறுபாடுகள், மாறுபாடுகள் இருந்தாலும், தமிழன் என்று சொல்லுகிற நேரத்தில் அத்தனை கட்சி வேறுபாடுகளையும், போட்டி மனப்பான்மையையும் மறந்துவிட்டு அந்த ஒரே உணர்வோடு நாம் இருக்க வேண்டும்.

"உள்ளத்தால் ஒருவரே
கள்ளத்தால் நெருங்கொ ணாதே
என வையம் கலங்கக் கண்டு
உள்ளம் துள்ளும்நாள் எந்நாளோ?"

என்றாரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்த பாரதிதாசனுடைய பாடலுக்கு எடுத்துக்காட்டாக நாம் நிற்க வேண்டும்.

*பிற்பகல் 1-00*

இங்கே நாம் போற்றி, பாதுகாக்க வேண்டிய ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறோம். நம்முடைய அருமைத் தோழர், நண்பர், தம்பி கண்ணப்பன்கூட, நான் இந்த மூன்றைச் சொல்வதற்குக் காரணம், மூன்றில் எது பிடிக்கிறதோ அந்த மரியாதை வார்த்தையை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேனேயல்லாமல் வேறல்ல. அவர்கூட எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அண்மையிலே சில பேருடைய விமர்சனங்களுக்கு மதிப்பு தர, குறிப்பாக, எதிர்க்கட்சியினுடைய வாதத்திற்கு மதிப்பு தர, கருத்துக்கு மதிப்பு தர, விடுதலைப் புலிகளுக்காக வாதாடுகிற அல்லது இந்தியாவைத் துண்டாட வேண்டும் என்கின்ற கருத்துபட பேசுகின்றவர்களைச் சிறையிலே அடைக்காமல் ஏன் இருக்கிறார் என்று கேட்டபோது, நான் நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில நாட்கள் சிறைச்சாலையிலே இருந்து திரு. வைகோ அவர்களும் திரு. கண்ணப்பன் அவர்களும் விடுதலையானார்கள். விடுதலையான பிறகு வைகோ அளித்த பேட்டியிலே சொன்னது என்ன தெரியுமா? இலங்கையிலே நடைபெறுகின்ற இனப் படுகொலைக்கும் அங்கே தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் பிரதமர் மன்மோகன் சிங்கும், தமிழக முதலமைச்சர் கருணாநிதியும்தான் காரணம் என்று வைகோ சொன்னதாகப் பத்திரிகையிலே வந்தது. கண்ணப்பன் அவர்கள் படிக்கத் தவறியிருக்க மாட்டார்கள். இதை நான் சொல்வதற்குக்

2008 நவம்பர் 12] [கலைஞர் மு. கருணாநிதி]

காரணம் நாம் ஒற்றுமையாக இருந்து, ஒன்றுபட்டு, இதுபோன்ற சூழ்நிலைகளில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்காமல், ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்காமல், ஒருவர்மீது ஒருவர் பழி சுமத்தாமல் நாம் இருந்தால், இலங்கைப் பிரச்சினை இவ்வளவு கடுமையாக நம்மீது மோதியிருக்காது. ஆகவே, இனியாவது இதுபோன்ற நேர்வுகளில் மாத்திரமாவது நாம் ஒற்றுமையாக இருப்போம். தேர்தல் என்றால், அரசியல் பிரச்சினை என்றால், நாம் வேற்றுமை பாராட்டுவதிலேகூட அர்த்தம் உண்டு. ஆனால், ஓர் இனத்தைக் காப்பாற்றுகின்ற இதுபோன்ற பெரும் பொறுப்பு நம் தலையிலே விழும்போது, நாம் ஒற்றுமையாக இருந்தாக வேண்டும். அந்த ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும். அந்த ஒற்றுமை கட்டிக்காக்கப்படும் என்ற நம்பிக்கை இங்கே நம்முடைய ரவிக்குமார், கண்ணப்பன், சிவபுண்ணியம், பாலபாரதி, ஜி.கே. மணி, பீட்டர் அல்போன்ஸ், பன்னீர்செல்வம் ஆகியோர் பேசிய பேச்சுகள் இடையிடையே கொஞ்சம் மாறுபட்டு வேறு பாதையிலே சென்றாலும், கடைசியாகப் போகும் திசை எது, அடைய வேண்டிய திசை எது, குறிக்கோள் எது என்ற அந்த நிலையிலேயிருந்து மாறாமல் இலங்கையிலே தமிழர்கள்மீது நடத்தப்படுகின்ற இனப்படுகொலைப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் அறுதியிட்டு இங்கே கூறியிருக்கின்றார்கள்.

இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்ததன்மூலமாக, இது இந்த அவையிலே மாத்திரம் முன்மொழிந்து, வழிமொழிந்தது அல்ல; தமிழ் நாட்டிலே உள்ள 6 அல்லது 7 கோடி மக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், உலகத்திலே மூலைமுடுக்கு நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் அத்தனை பேரும் வடித்தெடுத்த தீர்மானம் என்பதை நம்முடைய அன்பிற்கும், மதிப்பிற்கும், பெருமைக்கும் உரிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், அவர் தலைமையிலே இயங்குகின்ற ஆட்சிக்கு வழித்துணையாக, வழிகாட்டியாக விளங்குகின்ற சோனியா காந்தி அம்மையார் அவர்களும் சிந்தித்துப் பார்த்து, நம்முடைய கனவாக இது போய்விடாமல், இது நிச்சயமாக நடந்து, போர் நிறுத்தம் ஏற்பட்டது, இலங்கையிலே தமிழர்கள் எல்லாம் அமைதியாக வாழ்கிறார்கள் என்ற ஒரு சூழ்நிலையை வெகு விரைவிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

நம்முடைய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நிறைவேற்றிய தீர்மானங்கள் முழுமையாக அனைத்தும் நிறைவேற்றப்படாவிட்டாலும், போர் நிறுத்தம் ஒன்றைத் தவிர, மற்றவைகள் எல்லாம் படிப்படியாக

நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு உரையாற்றிய அத்தனை பேருக்கும் என்னுடைய இதயமார்ந்த வணக்கத்தை, வாழ்த்துகளை வெளியிட்டு, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் கருத்துகள் எனக்கும் ஏற்புடையது என்று எனது ஆதரவுக் கருத்தினை இந்த அவையில் பதிய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 3. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த Call Attention-களை நேரம் போதாததால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) Zero Hour-ல் என்ன சொல்லுங்கள்.